இதழ் 26 மார்ச் 2012 விலை 25.00

# தெளிவு



# ஜெனீவாவில் ஜெயிக்கப் போவது யார்?

ஜெனிவாவில் 27.02.2012ல் ஆரம்பமான ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத்தொடர் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி வரை தொடரப்போகிறது. இந்தக் கூட்டத்தொடரில் பல நாடுகளின் விவகாரங்கள் குறிப்பாக, சிரியா, லிபியா, மாலைதீவு, இலங்கை போன்ற நாடுகளின் விவகாரங்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என எதிபார்க்கப்படுகின்றது.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றை இந்தக் கூட்டத்தொடரில் அமெரிக்கா முன்மொழிய உள்ளதாகவும் அமெரிக்காவின் நட்பு நாடுகள் அனைத்தும் இதனை ஆதரிக்கப் போவதாகவும் செய்திகள் வெளியாகிக் கொண்டு இருக்கின்றன. ஆனால், அமெரிக்காவின் பின்புலத்துடனேயே இத்தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளது எனவும் அதை யார் கொண்டு வரப்போவது என்று தெரியவில்லை எனவும் இன்னொரு செய்தியும் வெளியாகியுள்ளது.








அண்மையில் கொழும்பு வந்திருந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூத்த அதிகாரிகளான றொபேட் ஓ பிளேக்கும், மரியா ஒரேரோவும் அமெரிக்கா இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கப் போவதாகவே கூறியுள்ளனர்.

கடந்த செப்டெம்பர் மாதம் நடந்த கூட்டத்தொடரில் கனடா இலங்கைக்கு எதிரான இதேமாதிரியான ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர முயன்று போதியளவு ஆதரவு கிடைக்காமல் அது கைவிடப்பட்டது. எனவே கனடாவே இம்முறையும் அந்த முயற்சியைத்

5ம் பக்கம் பார்க்க...

## 5 ஐரோப்பிய நாடுகளில்

# புலிகளின் பிரிவினை கொள்கை பரப்பும் 420 பாடசாலைகள்



இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து ஐந்து ஐரோப்பிய நாடுகளில் தமிழர்கள் எல். ரி. ரி. ஈ. இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்பக்கூடிய 420 பாடசாலைகளை நடத்தி வருவதாக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு இரகசியத் தகவல்கள் கிடைத்துள்ளன. எதிர்காலத்தில் தமிழ் மக்களிடையே எல். ரி. ரி. ஈயின் பிரிவினவாத அரசியல் சித்தாந்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்காகவே வெளிநாடுகளில் உள்ள புலம் பெயர் தமிழர்கள் இந்த முயற்சியை மேற்கொண்டு வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

எல். ரி. ரி. ஈ. கொள்கையைப் பரப்பும் இந்தப் பாடசாலைகள் ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், நெதர்லாந்து மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளில் நடத்தப்படுகின்றன. இவற்றில் நான்கு வயது முதல் 20 வயதுக்கிடையிலான சுமார் 20 ஆயிரம் தமிழ் மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். இத் தகவல்களின்படி ஜேர்மனியில் 145 பாடசாலைகளும், சுவிற்சர்லாந்தில் 133 பாடசாலைகளும், டென்மார்க்கில் 65 பாடசாலைகளும், பிரான்ஸில் 52 பாடசாலைகளும், நெதர்லாந்தில் 25 பாடசாலைகளும் நடத்தப்படுவதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

இந்த மாணவர்களுக்கு எல். ரி. ரி. ஈ.யினரின் கொள்கைகளை வெளிநாடுகளில் பரப்பும் நோக்கத்துடனும், வருமானத்தை திரட்டும் நோக்கத்துடனும் இப்பாடசாலைகள் நடத்தப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது. இந்த ஒவ்வொரு மாணவரிடமும் அறவிடப்படும் கட்டணம் எல். ரி. ரி. ஈயின் சர்வதேச வலையமைப்பின் நிதியத்தில் சேர்க்கப்படுகின்றது. இந்தப் பாடசாலைகளை தமிழ்ச்சோலை பாடசாலைகள் என்று அழைக்கின்றார்கள். ஐரோப்பாவில் மாத்திரம் 350 க்கும் அதிகமான தமிழ்ச் சோலைப் பாடசாலைகள் இருக்கின்றன. இவற்றுக்கு எம். கே., ரி. கே. என்., அப்ரிக் மற்றும் அன்னைபூபதி என்று பெயரிடப்பட்டுள்ளன.

எல். ரி. ரி. ஈ. தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரோடு இருந்த காலகட்டத்தில் செஞ்சோலை என்ற பெண்களுக்கான இரண்டு ஆதரவற்றோருக்கான இல்லங்களும், காந்த ரூபன் அறிவுச் சோலை என்ற ஆண்களுக்கான ஆதரவற்றோர் இல்லமும் நடத்தப்பட்டது. இவை ஊடாக

14ம் பக்கம் பார்க்க...

## இவ்வருடத்தில் முதல் 52 நாட்களில்

# 86 இலங்கையர் வெளிநாடுகளில் மரணம்








இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் பெப்ரவரி 21 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் மாத்திரம் 86 இலங்கையர்கள் வெளிநாடுகளில் உயிரிழந்துள்ளனரென வெளிவிவகார அமைச்சின் கொன்சுயுலர் பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார். வழமையிலும் பார்க்க இவ்வருடம் முதல் இரண்டு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்பாகவே வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் மரணவீதம் பாரிய அதிகரிப்பை எட்டியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.



சாதாரணமாக வருடத்திற்கு 60 தொடக்கம் 65 வரையான இலங்கையர்களே வெளிநாடுகளில் உயிரிழப்பது வழமை. இதற்கு முன்னர் குறுகிய காலப் பகுதிக்குள் ஆகக்கூடியது சுமார் 25 வரையிலான இலங்கையர்கள் வெவ்வேறு நாடுகளில் உயிரிழந்திருந்தனர். அந்தவகையில் கடந்த 52 நாட்களுக்குள் 86 இலங்கையர்களின் மரண வீதம் பாரிய அதிகரிப்பைக் காட்டுவதாகவும் அவர் கூறினார்.

கிடைக்கப் பெற்றிருக்கும் தகவல்கள் அடிப்படையில் மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள இலங்கையர்களே அதிகளவில் உயிரிழந்துள்ளனர். இவர்கள் விபத்து, சுகயீனம் மற்றும் தற்கொலை ஆகிய காரணங்களினாலேயே கூடுதலாக மரணமடைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பெண்களை விட அதிகளவிலான ஆண்களே குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் உயிரிழந்துள்ளனர். வெளிநாடுகளில் இதுவரை உயிரிழந்திருக்கும் 86 இலங்கையர்களினும் சுமார் 16 பேர் வரையிலானோரது சடலங்கள் அந்தந்த நாடுகளிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் பல சடலங்கள் இலங்கையிலுள்ள உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

14ம் பக்கம் பார்க்க...

6 சிரிய விவகாரத்தின் யதார்த்தம் என்ன?   8 பூகம்பம்   9 கூடா நட்பு கேடாய் முடியும்   10 பொட்டல் காடு   11 கொலம்பஸின் மறுபக்கம்   12 போலி இறைபக்தி   13 சேகுவேரா என்ற மனிதாபிமானி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜினாமா செய்யுமாறு துப்பாக்கி முனையில் நிர்ப்பந்திக்கப்பட்டேன்



## மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி

பொலிஸாரினாலும் இராணுவத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட "புரட்சியொன்றின்போது" ஜனாதிபதி பதவியிலிருந்து ராஜினாமா செய்வதற்கு நான் துப்பாக்கி முனையில் நிர்ப்பந்திக்கப்பட்டதாக மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் தெரிவித்துள்ளார்.




நீதிபதியொருவரை கைது செய்ததை அடுத்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் காரணமாக ஜனாதிபதி பதவியிலிருந்து மொஹமட் நஷீட் பெப்ரவரி 7ம் திகதி ராஜினாமா செய்தார். இந்நிலையில் ராஜினாமா செய்வதற்கு தான் துப்பாக்கி முனையில் நிர்ப்பந்திக்கப்பட்டதாக மொஹமட் நஷீட் கூறியுள்ளார்.

பொலிஸாரினதும் படையினரதும் இந்நடவடிக்கையை நஷீட்டின் கீழ் உப ஜனாதிபதியாக இருந்தவரும் தற்போதைய ஜனாதிபதியுமான மொஹமட் வாஹீட் ஹுசன் மனிக் அறிந்திருந்தார் எனவும் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் கூறியுள்ளார்.

எனினும் இதை ஜனாதிபதி மொஹமட் வாஹீட் ஹுசன் மறுத்துள்ளார்.

இதேவேளை மொஹமட் நஷீட்டை ஜனாதிபதி பதவியிலிருந்து வெளியேற்றியமைக்கு எதிராக நஷீட் உட்பட மாலைதீவு ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கானோர் தலைநகர் மாலேயில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது பொலிஸார் குண்டாந்தடி மற்றும் கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொண்டதால் பலர் காயமடைந்துள்ளனர்.

தற்போது இந்த சதி முயற்சியின் பின்னணியில் அமெரிக்காவின் மறைகரம் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

நமது அண்டை நாடான மாலைதீவில் அரசியல் நெருக்கடியும் கலவரமும் தீவிரமடைந்துள்ள நிலையில், அந்நாட்டு நிலைமை பயன்படுத்திக்கொள்ள அமெரிக்கா முயற்சியில் இறங்கியுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. மிகவும் கேந்திரமான கடல்பகுதிக்குள் அமைந்திருக்கும் மாலைதீவை தனது தளமாக்க நீண்டகாலமாக முயற்சித்து வரும் அமெரிக்கா, அந்நாட்டிற்கு தனது வெளியுறவுத்துறை துணை அமைச்சர் ராபர்ட் பிளேக்கை அனுப்பியுள்ளது.


தென் கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் தனது வலுவான தளங்களை இழந்துள்ள அமெரிக்கா தற்போது மாலைத் தீவில் தனது கழுகுக் கண்களை பதித்து வருவதாக அவதானிகள் கருதுகின்றனர். சீன, இந்திய நாடுகளின் அபரிமிதமான பொருளாதார வளர்ச்சி எதிர்காலத்தில் உலகில் பலம் மிக்க நாடாக இவை தம்மை மேலும் உறுதிப்படுத்துவதை அமெரிக்கா விரும்பப் போவதில்லை. இதற்கு பாகிஸ்தானை உபயோகப்படுத்த முயன்று, தலிபான் மற்றும் பின் லாடன் விவகாரங்களால் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே 30 வருடங்களுக்கு முன்பு பிலிப்பைன்ஸில் மார்க்கோசின் வீழ்ச்சியால் அங்கும் தனது தளங்களை நிலை நிறுத்த முடியாமல் போனதோடு ஜப்பானிலும் அவர்களது தளங்களுக்கு எதிராக மக்களின் எதிர்ப்பு வலுவடைந்து வருகின்றது.

சரத் பொன்சேகாவை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடனும் இலங்கை ஜனாதிபதியாக்க அமெரிக்கா எடுத்த முயற்சியும் தோல்வியடைந்தது. இந்நிலையில் போர்க் குற்றம் என்று கூறிக்கொண்டு இலங்கைக்குள் புக முயன்று வரும் அமெரிக்கா, இலங்கை அரசின் சீன, ரஷ்ய, ஈரான், இந்திய உறவுகளால் சற்று பின்வாங்கியுள்ளது. எனவே கேந்திர முக்கியத்துவம் நிறைந்த மாலை தீவு போன்ற நாடுகளில் தனது கவனத்தை அமெரிக்கா திருப்பியிருப்பது ஒன்றும் ஆச்சரியமான விடயமல்ல.

இந் நிலையில் தற்போது மாலை தீவில் ஏற்படுத்தப்பட்ட வலிந்த ஆட்சி மாற்றம் அமெரிக்காவிற்கு கிடைத்துள்ள அரிய வாய்ப்பு என்றே கருதப்படுகின்றது. மக்களின் அமோக ஆதரவில் வென்ற ஒரு ஜனாதிபதியை சுயவிருப்பின் பேரில் ஒரே நாளில் இராஜினாமா செய்ய வைத்தது நம்பும்படியாக இல்லை. இந்த வலிந்த ஆட்சி மாற்றத்தைப் பாவித்து எப்படியாவது தாம் நினைப்பதை நிறைவேற்றி விட அமெரிக்கா முழு வீச்சில் செயற்படவே முனைகின்றது. தற்போது, மாலை தீவிற்கு அமெரிக்க இராஜ தந்திரிகள் தமக்கு சாதகமான பொம்மை அரசொன்றை ஆசீர்வதித்து நிறுவ விரைந்திருக்கின்றனர். இவர்களுக்கு மாலை தீவு மக்கள் நல்ல பாடம் புகட்டுவார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# ஈரானில் ஹானியாவுக்கு



# மாபெரும் வரவேற்பு



அண்மையில் ஈரான் இஸ்லாமியக் குடியரசுக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த பாலஸ்தீன பிரதமர் இஸ்மாயில் ஹானியா ஈரான் இஸ்லாமியக் குடியரசின் ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லாஹ் அலி காமெனெயி, ஜனாதிபதி அஹ்மதி நஜாதி மற்றும் உயர் அதிகாரிகளையும் சந்தித்து பலஸ்தீன விவகாரங்களையும் பிராந்திய நெருக்கடிகள் பற்றியும் கலந்துரையாடினார். அதன் போது, பாலஸ்தீனப் போராட்டம் தற்போது வெற்றியை அண்மித்துள்ளதாகவும் எக்காரணம் கொண்டும் இறுதிவரை போராட்டத்தைக் கைவிடக் கூடாது எனவும் பலிரி அரபாத் போராட்டத்தைக் கைவிட்டதாலேயே மக்கள் ஆதரவை இழந்தார் என கூறியதோடு ஈரான் எப்போதும் பலஸ்தீன விவகாரத்தில் போராட்டக் குழுக்களின் பக்கமே இருக்கும் எனவும் புரட்சித் தலைவர் கூறினார்.

அதற்குப் பதிலளித்துப் பேசிய இஸ்மாயில் ஹானியா "அல் குத்ஸ் உட்பட அனைத்து பாலஸ்தீன நிலங்களையும் மீட்டெடுத்து அகதிகள் அனைவரும் நாடு திரும்பும் வரை ஹமாஸின் போராட்டம் ஓயாது" என உறுதிபடக் கூறினார். ஈரான் இஸ்லாமியக் குடியரசு தமக்களித்த மாபெரும் வரவேற்புக்காகவும் பலஸ்தீன் விவகாரத்தில் ஈரானின் நிலைப்பாடு மற்றும் உதவிகளுக்காகவும் ஹானியா நன்றி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரேயொரு ஆசிரியரைக் கொண்ட 92 பாடசாலைகள்!

## இரு ஆசிரியர்களை கொண்டவை 168



இலங்கையில் ஒரேயொரு ஆசிரியரை மாத்திரம் கொண்டியங்கும் 92 பாடசாலைகள் உள்ளதாகவும் இரு ஆசிரியர்களை மாத்திரம் கொண்டுள்ள 168 பாடசாலைகள் உள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

வடமாகாணத்தில் 58 பாடசாலைகளில் தலா ஒரு ஆசிரியரே உள்ளனர். மேல் மாகாணத்தில் இத்தகைய 3 பாடசாலைகள் உள்ளன.


மத்திய மாகாணத்தில் 9 பாடசாலைகளிலும் கிழக்கு மாகாணத்தில் 9 பாடசாலைகளிலும் சப்ரகமுவ மாகாணத்தில் 5 பாடசாலைகளிலும் வடமத்திய மாகாணத்தில் 3 பாடசாலைகளிலும் ஊவா மாகாணத்தில் இரு பாடசாலைகளிலும் தென் மாகாணத்தில் ஒரு பாடசாலையிலும் தலா ஒரு ஆசிரியர் மாத்திரம் உள்ளனர்.

வட மாகாணத்தில் 48 பாடசாலைகளில் தலா இரு ஆசிரியர்கள் மாத்திரம் உள்ளனர். மத்திய மாகாணத்தில் இத்தகைய 29 பாடசாலைகள் காணப்படுகின்றன.

கல்வி அமைச்சின் திட்டமிடல் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள புள்ளி விபரங்களின்படி, 254 பாடசாலைகள் தலா 3 ஆசிரியர்களை மாத்திரம் கொண்டுள்ளன. 4 ஆசிரியர்களை மாத்திரம் கொண்டுள்ள 375 பாடசாலைகள் உள்ளன.

இலங்கையில் 9790 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் 1552 பாடசாலைகள் 50 பேரைவிட குறைந்த எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளாகும். அதேவேளை 2500 மாணவர்களைவிட அதிகம் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 187 ஆகும்.

# மாணவர்களுக்கான வாய்ப்பாடு மனனமுறை மீண்டும் அறிமுகமாகும்!




புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள பாடத்திட்டத்தின் கீழ், ஆரம்பப்பிரிவு மாணவர்கள் 12 ஆம் வாய்ப்பாடு வரை மனனம் செய்ய வேண்டுமென கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார். 10 வருடங்களுக்கு முன்னர் வெளிநாட்டு நிறுவனமொன்றினால் அறிமுகம் செய்யப்பட்ட கல்விச் சீர்திருத்தத்தின் விளைவாக கணிதத்தில் முக்கியமான ஒரு விடயத்தை அறிந்திராத ஒரு பரம்பரை உருவாக்கப்பட்டுள்ளது என அமைச்சர் கூறினார்.

"நாம் இந்தத் தவறை திருத்திக்கொள்ள வேண்டும். இந்தியாவில் 3 ஆம் வகுப்பு மாணவர்கள் 15 ஆவது பெருக்கல் வாய்ப்பாடுவரை மனனம் செய்கிறார்கள். நாம் பெருக்கல் வாய்ப்பாட்டை மனனம் செய்யும் முறையை அறிமுகம் செய்யவுள்ளோம்" என அவர் கூறினார்.

அதேவேளை புதிய கல்விச்சீர்திருத்தத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கு 5 துறைகளில் ஒன்றில் கல்வி கற்க வாய்ப்பு கிடைக்கும் என அவர் கூறினார்.

அடுத்த வருடத்திலிருந்து . கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம், தொழில்நுட்பம் ஆகிய 5 பிரிவுகளில் மாணவர்கள் கல்வி கற்பர். இவர்கள் 2015 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதவுள்ளனர்.

# உலக தரவரிசையில் இலங்கை மாணவி முதலிடம்


க.பொ.த. உயர்தர (லண்டன்) பரீட்சையில் ஆங்கில இலக்கியத் தரவரிசையில் உலகில் முதலிடம் பெற்றமைக்காக இலங்கை மாணவியான நிலுஷிகா சமரதுங்க, அண்மையில் நடைபெற்ற "ஸ எக்ஸலன்ஸ் ஹை அச்சீவர்ஸ் 2010/2011 விருதுவழங்கல் வைபவத்தின்போது விருதுவழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கொழும்பு சர்வதேச பாடசாலையின் முன்னாள் மாணவியான இவர், க.பொ.த. சாதாரணதர (லண்டன்) பரீட்சையிலும் உலகில் முதல் 3 இடங்களுக்குள் தெரிவானமைக்காக பரிசொன்றைப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. சாதாரண தரப் பரீட்சையில் 8 ஏ சித்திகளைப் பெற்றமைக்காகவும் அவர் எக்ஸலன்ஸ் விருதை பெற்றுக்கொண்டார்.

இவர் தற்போது லண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் இரண்டாம் வருட சட்டத்துறை மாணவியாக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பைஸர் முஸ்தபா, நாமல் ராஜபக்ஷ உள்ளடங்கிய

# அரச தூதுக்குழு பலஸ்தீன் விஜயம்



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ மற்றும் பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா உள்ளடங்கிய அரச உயர் மட்ட தூதுக்குழுவொன்று 18.02.20112 சனிக்கிழமை மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பலஸ்தீனத்திற்கு விஜயம் செய்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பலஸ்தீன அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே இந்த தூதுக் குழுவினர் பலஸ்தீனத்திற்கு விஜயம் மேற்கொள்கின்றதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட தூதுவராகவே நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பலஸ்தீன் விஜயம் மேற்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, விஞ்ஞான தொழில்நுட்ப பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபா, நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன புஷ்பகுமார மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாரத்ன அமுனுகம ஆகியோரும் இக்குழுவில் உள்ளடங்குகின்றனர்.

இதேவேளை, இஸ்ரேலிய நாடாளுமன்றத்தின் அழைப்பின் பேரில் இலங்கை நாடாளுமன்ற குழுவொன்று கடந்த ஜனவரி 29ஆம் திகதி இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது

### நபிகளார் பற்றிய கட்டுரைப் போட்டியில்

# பௌத்த தேரர் முதலிடம்



மனித நேயத்தால் உலகை வென்ற நபிகள் நாயகம் என்ற தலைப்பிலான கட்டுரை போட்டியில் பௌத்த தேரரொருவர் முதலிடத்தை பெற்றுள்ளார்.

சமய கலாசார கல்விக்கான மன்றம் "மனித நேயத்தால் உலகை வென்ற நபிகள் நாயகம்" என்ற தலைப்பில் சிங்கள மொழி பேசும் முஸ்லிம் அல்லாதவர்கள் மத்தியில் நடத்திய கட்டுரை போட்டியொன்றை நடத்தியது. இப்போட்டியில் வண. கசிம தேரர் முதலிடத்தை பெற்றுக்கொண்டார்.

இதன் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் இலங்கை பத்திரிகை ஸ்தாபன கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சமய, கலாசார கல்விக்கான மன்றத்தின் தலைவர் எம்.எச்.ஏ. நஜ்ரான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தலைவர் என்.எம். அமீன், அஷ்ஷெய்க் உவைஸ் உட்பட பலர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர்.

இக்கட்டுரைப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட வண. கசிம தேரர் உள்ளிட்ட நாடளாவிய ரீதியிலான வெற்றியாளர்களுக்கு இதன்போது பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது "ஒவ்வொரு மாணவனும் ஏனைய மதங்களை பற்றி அறிந்து கொள்ளும் வகையில் பாடசாலை புத்தகங்களில் ஏனைய மதங்கள் தொடர்பான விபரங்கள் சேர்க்கப்பட வேண்டும். அப்போது தான் நாட்டில் நிரந்தர சமாதானம் உருவாக முடியும். இது காலம் கடத்தாது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்" என வண. கசிம தேரர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு "THELIVU" 38, Moor Road, Dehiwela

# எண்ணெய் விலையேற்றமும் இலங்கையும்

[illegible]

# மத்திய தரைக் கடலில் நடமாடும் ஈரான் யுத்தக் கப்பல்கள்



[illegible]

ஜெனீவாவில்.......1ம் பக்கத் தொடர்ச்சி



தொடரலாம் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.

அண்மையில், ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்றத்தில் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனை அடிப்படையாக வைத்து ஐரோப்பிய யூனியன் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவர வாய்ப்புள்ளதாக ஊகங்கள் வெளியாகின. ஆனால் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அது ஒரு உறுப்பு நாடு அல்ல என்பதால் ஐரோப்பிய யூனியன் இந்தத் தீர்மானத்தை நேரடியாகக் கொண்டு வர முடியாது. எனவே, ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் ஏதாவது ஒரு நாட்டின் மூலம் அதைச் செய்யலாம் என்ற கருத்தும் பரவலாக வலுவடைந்து வருகின்றது.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த 2009ம் ஆண்டு ஜெனீவாவில் நடந்த சிறப்புக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான ஒரு தீர்மானத்தை சுவிட்ஸ் கொண்டு வந்தது. அப்போது போரின்போது எந்த மீறல்களும் நடக்கவில்லை என்று இந்தியா, சீனா, ரஷ்யா, கியூபா, போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகப் பேசி அதனை முறியடித்தன.

அதனைத் தொடர்ந்து அரசாங்கம் கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஏற்படுத்தி ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் நெருக்கடிகளில் இருந்து தப்பி வந்தது. ஆனால், அதன் பரிந்துரைகளை அரசாங்கம் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை என்பதே தற்போதைய குற்றச்சாட்டாகும். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்தக் கோரியும் பொறுப்புக் கூறுவதற்கு பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்றும் இந்தத் தீர்மானம் வலியுறுத்தும் என்று நம்பப்படுகிறது.

27.02.2012 மாலை உரையாற்றிய இலங்கை அமைச்சரும் மனித உரிமை பேரவைக் கூட்டத்தொடரின் இலங்கையின் தலைமைப் பிரதிநிதியுமான மஹிந்த சமரசிங்க, இந்த விடயத்தில் இலங்கை இதுவரை காட்டி வருகின்ற அர்ப்பணிப்பு உணர்வை கொண்டு பார்க்கும் போது, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு கோரும் எந்தவிதமான தீர்மானமும் கொண்டுவரப்படுவதற்கான அவசரமும், நியாயமும் கிடையாது என்றும் ஏற்கனவே ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அமுல்படுத்தத் தொடங்கிவிட்டது என்றும் இலங்கையின் இறுதிப்போரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாக கூறப்பட்டவை, மிகைப்படுத்திக் கூறப்பட்ட விடயம் என்றும் கூறிய அவர், அதில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை கணிக்க இலங்கை உரிய பொறிமுறைகளை கையாள்வதாகவும் கூறினார். நல்லிணக்க ஆணைக்குழு பல ஆக்கபூர்வமான பரிந்துரைகளை செய்திருப்பதாக கூறியுள்ள அவர், அதனடிப்படையில் இறந்தவர்கள் பற்றியும், அதில் இராணுவத்தினருக்கு பங்கிருக்கிறதா என்பது குறித்து ஆராயவும், அதற்கான பதில் நடவடிக்கைகளுக்காகவும் சிவிலியன் மற்றும் இராணுவ நடைமுறைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஆகவே இந்த விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்கு இலங்கைக்கு உரிய காலக்கெடு வழங்கப்பட வேண்டும் என்றும், அதில் வெளியார் தலையீடு எதுவும் இருக்கக் கூடாது என்றும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டார்.

அதேநேரம், தமது நாட்டுக்கு எதிராகக் கொண்டுவரப்படும் எத்தகைய தீர்மானத்தையும் தமது நட்பு நாடுகளின் பக்கபலத்தோடு முறியடித்துவிடலாம் என அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது. தென் அமெரிக்க நாடுகளும் ஆபிரிக்க நாடுகளும் மத்திய கிழக்கு நாடுகளும் தமக்கு ஆதரவளிக்கும் என்ற நம்பிக்கையே இதற்குக் காரணமாகும். இந்த முயற்சியில் எந்த அளவு பலன் கிட்டும் என்பதை ஜெனீவா கூட்டத்தொடரின் இறுதிக் கட்டத்தில்தான் உணர முடியும்.


47 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் எந்த நாடுமே நிரந்தர உறுப்பு நாடு அல்ல என்பதும் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் உறுப்பு நாடுகள் மாறிக் கொண்டிருக்கும் என்பதும் ஒரே நாடு அடுத்தடுத்து இரண்டு முறை உறுப்புரிமை பெற முடியாது என்பதும் இங்கு நோக்கற்பாலது. இதனால் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் மேற்கு நாடுகளின் ஆதிக்கம் குறைவு என்றே கூறலாம். மனித உரிமைகள் பேரவையில் உறுப்புரிமையை எடுத்துக்கொண்டால், ஆபிரிக்காவுக்கு 13 இடங்களும் ஆசியாவுக்கு 13 இடங்களும் லத்தீன் அமெரிக்காவுக்கு 8 இடங்களும் கிழக்கு ஐரோப்பாவுக்கு 6 இடங்களும் மேற்கு ஐரோப்பாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் 7 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் பெரும்பாலானவை ரஷ்யாவை அல்லது சீனாவை சார்ந்திருப்பவை. இந்தப் பகுதி நாடுகள் பலவற்றுக்கு அமெரிக்காவையோ மேற்குலகையோ பிடிக்காது. எனவே தமது நலனுக்காக சீன, ரஷ்ய சார்பு நிலையை பேணிக் கொள்கின்றன.

இவ்வாறான நிலைமையில், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கொண்டு வருவதில் ஆர்வம் காட்டும் மேற்குலக நாடுகள் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் தமது செல்வாக்கை செலுத்துவது கடினம். எனவேதான் அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை தோற்கடித்து விடலாம் என்ற நம்பிக்கையை வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஜெனீவாவில் தோற்கடிக்கப்பட்டாலும் மேற்குநாடுகள் மாற்று உபாயங்களைக் கடைப்பிடிக்கும் என்பது திண்ணம். இதனால், மேற்குலக அழுத்தங்கள் மேலும் கூடுமே தவிர குறையப் போவதில்லை. சிலவேளை, அவை கடுமையானதாகவும் இருக்கலாம். ஏனெனில் ஒரு நாட்டைப் பணிய வைத்து தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும் என மேற்கு நாடுகள், குறிப்பாக அமெரிக்கா விரும்பினால் இறுதிவரை அந்நாட்டை நிம்மதியாக இருக்க விடமாட்டார்கள் என்பது வரலாறு.

# பிரபல ஊடகவியலாளர் மேரி கொல்வின் சிரியாவில் கொலை





மேற்குலக நாடுகளைச் சேர்ந்த இரண்டு ஊடகவியலாளர்கள் சிரியாவின் ஹோம்ஸ் நகரில் தங்கியிருந்த கட்டிடத்தின் மீது நடந்த ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டதாக அரச எதிர்ப்பு செயற்பாட்டாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

சண்டே டைம்ஸ் பத்திரிகையின் மேரி கொல்வின் மற்றும் பிரஞ்சு புகைப்பட நிருபர் ரெமி ஒச்லிக் ஆகிய இருவர்தான் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் என்று பிரஞ்சு அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். ஹோம்ஸ் நகரின் பாபா அமர் பிரதேசத்தில் செயற்பட்டுவந்த தற்காலிக ஊடக மையத்தின் மீது ஷெல் தாக்குதல் நடந்தபோது மேலும் பலரும் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாபா அமர் என்கிற பகுதியில் இந்த இரண்டு ஊடகவியலாளர்கள் தங்கியிருந்த வீடு, அரச எதிர்ப்பாளர்களின் தற்காலிக ஊடக மையமாக செயற்பட்டுவந்தது. ஷெல் தாக்குதல் நடைபெற்றபோது, அந்த கட்டிடத்திலிருந்தவர்கள் வெளியே ஓடியபோது ராக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் சிரிய அதிபர் பஷர் அல் அசாத்துக்கு எதிரான கிளர்ச்சி ஆரம்பித்தது முதல் மேற்குலக செய்தியாளர்கள் சிரியாவுக்குள் பெரும்பாலும் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனாலும் அரச எதிர்ப்பு செயற்பாட்டாளர்களின் துணையுடன் பெரும் ஆபத்துக்களுக்கு மத்தியில் செய்தியாளர்கள் அங்கே சென்றபடி இருக்கிறார்கள்.

பிரஞ்சு நாட்டின் தொலைக்காட்சி ஊடகவியலாளர் கில்லியஸ் ஜாக்குயர், சிரிய அரசு ஏற்பாடு செய்திருந்த பயணத்தில் ஹோம்ஸ் நகருக்கு சென்றபோது கடந்தமாதம் கொல்லப்பட்டார்.

சண்டே டைம்ஸ் பத்திரிகையின் வெளிநாட்டு செய்தியாளரான மேரி கொல்வின் அமெரிக்காவில் பிறந்தவர். பல ஆண்டுகளாக லண்டனில் வசித்து வந்தார்.

உலகின் மோதல் நடக்கும் பிரதேசங்களில் அவர் இறப்பு முன்னரும் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தார். கொசோவோ, செச்சென்யா மற்றும் பல அரபு நாடுகளிலும் அவர் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தார்.

2001ஆம் ஆண்டு இலங்கையின் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் இருந்து அவர் செய்தி சேகரித்தபோது அவருக்கு ஏற்பட்ட காயத்தில் அவர் தனது ஒரு கண்ணை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரச எதிர்ப்பாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் மாவட்டங்களைச் சுற்றிவளைத்து பாதுகாப்புப்படையினர் கடந்த இரண்டு வாரகாலமாக தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

கொல்லப்பட்டவர்களில் ஹோம்ஸ் நகரிலிருந்து நேரடி காணொளியை ஒலிபரப்பிவந்த ராமி அல் சயத் என்பவரும் அடக்கம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். அவரது காணொளி காட்சிகளை தான் உலக ஊடக நிறுவனங்கள் பலவும் பயன்படுத்தி வந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிபிய பாணியில் சிரியாவிலும் தலையீடு செய்வதற்கு அனுமதி கோரும் ஒரு ஐக்கிய நாடுகள் சபை தீர்மானத்தை ரஷ்யாவும் சீனாவும் வீட்டோ அதிகாரத்தைக் கொண்டு தடுத்தமை அமெரிக்காவையும் அதன் ஏகாதிபத்திய கூட்டாளிகளையும் ஆத்திரமடையச் செய்துள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் திட்டங்களுக்கு உலகளாவிய ஒப்புதலை அளித்துவரும் ஐக்கிய நாடுகள் சபைகூட இதனால் அதிர்ந்து போயுள்ளது. மனித உரிமை பாதுகாவலர்கள் எனத் தம்மை அழைத்துக் கொள்ளும் மேற்கத்திய கொள்ளைக் கூட்டத்தினர் இந்த வீட்டோ நடவடிக்கை வெட்கக்கேடானதும் அருவருக்கத்தக்கதுமான நடவடிக்கை என தமது வயிற்றெரிச்சலைக் கொட்டியுள்ளதோடு இந்த முடிவிற்காக அவர்கள் பின்னர் வருந்தப்பட வேண்டியிருக்கும் என அச்சுறுத்தியுமுள்ளனர். அந்த வீட்டோவை ஐக்கிய நாடுகள் சபைக்கு ஏற்பட்ட ஒரு மாபெரும் களங்கமாக பிரான்சிய வெளியுறவுத்துறை அமைச்சர் அலைன் ஜூப்பே வர்ணித்துள்ளார்.

ஆனால் பலஸ்தீனத்தை ஆக்கிரமித்த நாள்தொட்டு சர்வதேச சட்டங்களைப் புறக்கணித்து மனித உரிமைகளைக் குழிதோண்டிப் புதைத்து, லெபனான், காசா மற்றும் மேற்குக் கரையில் இருந்த பாதுகாப்பற்ற ஆயிரக் கணக்கான மக்களைக் கொன்று குவித்து அவர்களுக்கெதிராக இஸ்ரேல் யுத்தங்களைத் தொடுத்தபோது அதன் தாக்குதலைக் கண்டித்துக் கொண்டுவரப்பட்ட

துறைமுகத்தை அதன் கப்பற்படை மட்டுமே அணுகுவதையும் பில்லியன் கணக்கான டொலர்கள் முதலீடுகளை இழப்பதோடும் இணைந்துள்ளது. சீனாவும் சிரியாவில் இதே போன்ற ஆனால், சற்றுக்குறைவான நலன்களைக் கொண்டுள்ளது. எவ்வாறிருந்த போதிலும் சீனாவின் முக்கிய எரிசக்தி விநியோகஸ்தராக விளங்கும் ஈரான் அரசை கவிழ்த்து விட்டு பாரசீக வளைகுடாவிலிருந்து காஸ்பியன் வளைகுடா வரையில் நீண்டிருக்கும் அந்த எண்ணெய் வளம் மிக்கதும் பூகோள முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஒரு பகுதியை அமெரிக்காவின்






கவிழ்க்கவும் இறுதியில் அவரைப் படுகொலை செய்யவும் கலகக்காரர்கள் என்று அழைக்கப்பட்டவர்களை சிறப்புப் படைகளும் உளவுத்துறை அமைப்புகளும் வழி நடத்தின. சிரியாவிலும் இதே உத்தியைத்தான் அமெரிக்கா பயன்படுத்த முயற்சிக்கின்றது. துருக்கி இராணுவத் தளத்திலிருந்து சிரியாவுக்குள் ஆயுதக்கடத்தலில் அமெரிக்கா ஈடுபட்டு வருவதாக அண்மையில் முன்னைநாள் அமெரிக்க FBI அதிகாரி சிபல் எட்மண்ட்ஸ் குறிப்பிட்டுள்ளார். அதுமட்டுமன்றி லிபிய சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான பயங்கரவாதக் கைதிகள் சிரியாவில் அரசாங்கத்துக்கு எதிராகப் போரிட வேண்டும் என்ற நிபந்தனையில் விடுதலை செய்யப்பட்டு துருக்கியூடாக சிரியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் துருக்கி ஹக்காரி நகரில் சிரியாவில் இயங்கும் ஆயுதக் குழுக்களுக்கு இராணுவப் பயிற்சி

# சிரியா விவகாரத்தின் யதார்த்தம் என்ன?

தீர்மானங்களை அதன் அமெரிக்கக் கூட்டாளி தொடர்ந்து வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தித் தடுத்தபோது ஐக்கிய நாடுகள் சபைக்கு ஏற்பட்ட களங்கம் குறித்தோ அல்லது அருவருக்கத்தக்க வெட்கக்கேடுகள் குறித்தோ எந்த உணர்வலைகளையும் காணமுடியவில்லை. அதேநேரம், பஹ்ரைன், யேமன், மற்றும் அரபு நாடுகளின் அத்துமீறல்கள், மனித உரிமை மீறல்கள், மனிதப் படுகொலைகள் என்பவற்றை அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் கண்டுகொள்வதில்லை. ஏனெனில், அவர்களைப் பொறுத்தவரையில், அங்கு சர்வாதிகாரம் நிலவினாலும் சரி மன்னராட்சி நிலவினாலும் சரி அதனால் அவர்களது நலன்களுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாத வரையில் அவையெல்லாம் இஸ்ரேலைப் போல அவர்களது செல்லப்பிள்ளைகள்தான்! முன்னாள் காலனித்துவ நாடுகள் மனித உரிமை மீறல்களுக்குக் குற்றவாளியாக ஆகும் போது அல்லது ஆக்கப்படும்போது அவற்றில் தலையீடு செய்வதற்கும் அவற்றைப் பதவியிலிருந்து இறக்குவதற்கும் பிரதான ஏகாதிபத்திய சக்திகளுக்கு உரிமை உண்டு என்பதே இதன் கருத்தாகும்.

இதில் கவனிக்கப்பட வேண்டிய ஒரு முக்கியமான அம்சம் என்னவெனில், அரபு உலகில் தமக்குக் கட்டுப்படாத, எந்த உடன்படிக்கைகளுக்கும் இணங்காத ஒரு நாடாகவே சிரியாவை அமெரிக்கா இனங்கண்டுள்ளது. மறுபுறம், ரஷ்யாவைப் பொறுத்தவரையில், அரபுலகில் சிரியா மட்டுமே அதன் கூட்டாளி நாடாகும். அதேநேரம், ரஷ்யாவின் நலன், ஆயுத உடன்படிக்கையில் பில்லியன் கணக்கான டொலர்கள் இழப்பையும் மத்திய தரைக் கடலின்



மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பெரிய திட்டத்தின் பாகமாகவே சிரியா ஆட்சிமாற்றத்திற்கு இலக்காக்கப்பட்டுள்ளது என்பதை முழு உலகமும் உணர்ந்துள்ளது.

அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் தற்போது கண்டுபிடித்திருக்கும் ஒரு புதிய உபாயம்தான், தனக்கு வேண்டப்படாத ஒரு நாட்டில் உள்நாட்டு யுத்தத்தை ஊக்குவித்து கலகக்காரர்களுக்கு ஆயுதங்களையும் டொலர்களையும் அள்ளி வழங்கி ஆட்சியாளர்களுக்கு தலையிடி கொடுத்தலாகும். அதனை அடக்குவதற்கு அந்த நாடு ஒடுக்குமுறையைப் பாவித்தால் மனித உரிமை மீறல்கள் என்று அந்த ஆட்சி குற்றஞ்சாட்டப்பட்டு அவர்களது தலையீட்டிற்கான போலிக் காரணமாகப் பயன்படுத்தப்படுகின்றது. லிபியாவில் அந்த பரீட்சார்த்த நடவடிக்கை அமோக வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது. முஅம்மர் கடாபியை

அளிக்கப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனவே, சிரிய படுகொலைகளுக்கு அமெரிக்கா மற்றும் அரபு ஆட்சியாளர்களினது நிதியுதவியுடன் இயங்கும் பயங்கரவாதக் குழுக்களே பின்னணியில் இருந்து செயல்படுகின்றன எனவும், பின்னர் அப்படுகொலைகள் அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டு கொலையுண்டோர் தொகை மிகைப்படுத்தப்பட்டு அவர்களது ஊடகங்கள் மூலம் மிக நேர்த்தியாக பரப்புரை செய்யப்படுகின்றது என சுதந்திர ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அரச நிதியுதவியுடன் இயங்கும் BBC, கட்டாரிலிருந்து இயங்கும் அல் ஜஸீரா மற்றும் சவுதி அரச உதவியுடன் இயங்கும் அல் அரேபியா போன்ற ஊடகங்கள் இப்பணியைத் திறம்படச் செய்கின்றன.

சிரியாவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினால் ஈரானைப் பணியவைப்பது சுலபம் என அமெரிக்கா நினைக்கிறது. அதற்கு அரபு நாடுகள் அனைத்தும் அமெரிக்காவுக்கு பக்க பலமாக பச்சைக் கொடி காட்டி வருகின்றன. அதுபோதாதென்று, அரபு நாடுகளுக்கு சார்பான ஊடகங்களும் ஷியா-சுன்னி பேதங்களை வளர்த்து அதற்கு தூபமிடுகின்றன. ஈரான் சிரியாவுக்கு ஆதரவளிப்பதற்குக் காரணம் அது ஷியா நாடு என்பதற்காகவல்ல. ஏனெனில் சிரியாவின் ஷியாக் கொள்கைகளை ஈரான் ஏற்றுக்கொள்வதில்லை என்பது ஒருபுறமிருக்க, சிரியா மேற்கத்தியர்களின் பொம்மை அரசாக மாறினால் மத்திய கிழக்கின் வலுச்சமநிலை பாதிக்கப்பட்டு ஈரானை வளைத்துக் கொள்ளையிட மேற்கத்தியர்களுக்கு நாமே வாசலைத் திறந்துவிட்ட நிலை ஏற்படும் என்ற அச்சமே அதற்குக்காரணம். எனவே சிரியாவின் வீழ்ச்சி முழு மத்திய கிழக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுமன்றி ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகளின் நலன்களையும் பாதிக்கும் என்பதால், பிணக்குகள் சிரியா-அமெரிக்கா அல்லது ஈரான்-அமெரிக்கா என்ற வரையறைக்குள் நின்றுவிடாது.


சர்வதேச விதிமுறைகளை மீறி, போர் வெறியுடன் சிரியா மீதோ ஈரான் மீதோ அமெரிக்கா தாக்குதல் நடத்துமானால், அது ரஷ்யாவின் தெற்கு பிரதேசங்கள் அனைத்தையும் போர்ச்சூழலுக்குள் தள்ளும் என்றும், இதையடுத்து மிகப் பெரும் போராக அது மாறும் என்றும் ரஷ்ய ராணுவத் தளபதி ஜெனரல் நிகோலாய் மககரோவ் மாஸ்கோவில் அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது கூறினார். தான் தாக்கப்பட்டால் அதே அளவிற்கு வலிமைமிக்க பதில் தாக்குதலை நடத்துவதற்கு ஈரானுக்கும் சக்தி இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மீள முடியாத பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் அமெரிக்கா, தனது பொருளாதாரம் மேலும் மேலும் வீழ்ச்சியடைவதை தடுத்து நிறுத்த எண்ணெய் வளம் கொண்ட லிபியாவை தாக்கி கைப்பற்றியது. ஈராக்கையும் சூறையாடியது. அடுத்து ஈரானுக்கும் குறிவைத்துள்ளது. நீண்ட காலமாகவே ஈரானின் அணுசக்தி திட்டங்களை அமெரிக்கா திட்டமிட்டு விமர்சித்து வருகிறது. ஈரான் அணு குண்டுகளை தயாரித்து வருவதாகவும் அதனால் உலகின் பாதுகாப்பிற்கு கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும், உலகிலேயே மிக அதிகளவிலான பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் இடைவிடாமல் இரைச்சலிட்டு வருகிறது. ஆனால், அணுசக்தியை தனது நாட்டின் மின் தேவை உள்ளிட்ட ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளுக்கு பயன்படுத்தவே ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருப்பதாக ஈரான் கூறிவருகிறது. அண்மையில் மூன்று அணு உலைகளை ஈரான் ஜனாதிபதி திறந்து வைத்துள்ளதோடு யாருடைய வற்புறுத்தலுக்காகவும் அச்சுறுத்தலுக்காகவும் ஈரான் தனது உரிமைகளை விட்டுக் கொடுக்காது எனவும் சூளுரைத்துள்ளார்.

நிலைமை இவ்வாறிருக்க, ஈராக், லிபியா, சிரியா மற்றும் ஈரான் போன்ற நாடுகளில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவும் ஆட்சியாளர்களைத் தண்டிக்கவும் அனுமதியையும் துணிச்சலையும் அமெரிக்காவுக்கு யார் கொடுத்தார்கள்? பிராந்தியப் பிரச்சினைகளை சுமுகமாகப் பேசித் தீர்த்துக்கொள்ளாமல் பேதங்களை வளர்த்து மேற்கத்திய மோகத்தில் மூழ்கிய அரபு ஷேக்குகளும் மன்னர்களும் இன்றுவரை நம்பியதைவிட எல்லாவற்றுக்கும் அமெரிக்காவை நம்புவதே இதற்கெல்லாம் காரணம். மத்திய கிழக்கில் ஈரானைத் தவிர மற்றெல்லா நாடுகளும் சிரியா உட்பட ஒன்றில் மன்னராட்சி அல்லது இராணுவ ஆட்சியே நடைபெறுகிறது. அங்கும் துனீஷியா, எகிப்திய பாணியில் மக்களாட்சி மலர வேண்டும் என்பதுதான் அனைவரதும் விருப்பமாகும். ஆனால் அந்த மாற்றம் லிபியாவில் நடந்ததைப் போல அமெரிக்காவின் பணபலத்தாலோ ஆயுத பலத்தாலோ அல்லது அவர்களது சதித்திட்டங்களாலோ நிகழக் கூடாது என்பதே எமது வாதம்.

-ஹஸ்மத் அலி

# அமெரிக்காவின் கன்னத்தில் அறைந்ததற்குச் சமானமானது



ஈரானிடம் இருந்து தொடர்ந்து எண்ணெய் இறக்குமதி செய்வதாக இந்தியா எடுத்த முடிவு, அமெரிக்காவின் கன்னத்தில் அறைந்ததற்குச் சமானமானது என, அமெரிக்க முன்னாள் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ஈரானின் அணுசக்தி திட்டங்கள் மீது சந்தேகம் கொண்டுள்ள அமெரிக்கா, அந்நாட்டின் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. ஈரானில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு, ஐரோப்பிய யூனியன் தடை விதித்துள்ளது. அதேநேரம், சர்வதேச அளவில் ஈரானைத் தனிமைப்படுத்துவதற்காக, ஈரானின் எண்ணெயை வாங்க வேண்டாம் என, அமெரிக்கா தனது நட்பு நாடுகளிடம் கூறி வருகிறது. இந்தியா அதைப் புறக்கணித்துவிட்டு தொடர்ந்து ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்து வருகிறது. இதுகுறித்து, அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் முன்னாள் சார்புச் செயலர் நிக்கோலஸ் பர்ன்ஸ் இதுகுறித்துக் கூறியிருப்பதாவது: ஈரானிடம் இருந்து தொடர்ந்து எண்ணெய் இறக்குமதி செய்வது என்ற இந்தியாவின் முடிவு, அந்நாட்டோடு நெருங்கிப் பழகி வரும் அமெரிக்காவுக்கு மிகப் பெரிய ஏமாற்றம்தான். மேலும், கடைசியாக இருந்த மூன்று அமெரிக்க அதிபர்கள் இந்தியாவின் அடுத்தடுத்த அரசுகளுடன் மேற்கொண்ட அரசியல் ரீதியிலான உறவுகளுக்குப் பின்னடைவுதான். ஈரான் விவகாரத்தில் சர்வதேச சமூகத்துடன் இணைந்து செல்லாமல் தனித்துச் செல்வதாக இந்தியா எடுத்த முடிவு, அதன் தலைமைத்துவம் பற்றிய சந்தேகங்களையும் எழுப்புகிறது. இவ்வாறு பர்ன்ஸ் தெரிவித்துள்ளார். சமீபத்தில், "தி பாஸ்டன் க்ளோப்" பத்திரிகையில், பர்ன்ஸ் எழுதியிருந்த ஒரு கட்டுரையில், இந்தியாவுடன் நீண்ட கால அடிப்படையிலான உறவுகளை அமெரிக்கா பேண வேண்டும் என குறிப்பிட்டிருந்தார்.

இதற்கிடையில், பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் நிறுவனங்களுக்கான மசகு எண்ணெய் விற்பனையை ஈரான் நிறுத்தியுள்ளது. ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியம் ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதாக குற்றம்சாட்டி எண்ணெய் தடைவிதித்தது. இந்த தடை எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முழுமையாக நடைமுறைக்கு வரவுள்ள நிலையில் ஈரான் அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. இதனைத் தொடர்ந்து சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை கடந்த 9 மாதங்களில் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. பிரான்ஸ் பிரிட்டனுக்கான எண்ணெய் விற்பனையை நிறுத்தி அதற்கு பதிலாக புதிய வாடிக்கையாளர்களுக்கு எண்ணெய் விற்க தீர்மானித்துள்ளதாக ஈரான் எண்ணெய் அமைச்சின் இணைய தளத்திற்கு தெரிவித்துள்ளார். எனினும் ஐரோப்பிய நாடுகளான நெதர்லாந்து, கிரீஸ், போர்த்துக்கல், ஸ்பெயின் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளுக்கான எண்ணெய் விற்பனையை ஈரான் நிறுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரானிடமிருந்து தற்போது ஐரோப்பிய நாடுகள் 20 வீதமான மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்கிறது. எனினும் அண்மைக்காலமாக ஈரானின் எண்ணெய் இறக்குமதியை ஐரோப்பிய ஒன்றியம் குறைந்து வருகின்றன. ஈரானிடம் இருந்து கடந்த ஆண்டு நாளொன்றுக்கு 700,000 எண்ணெய் பீப்பாய்களை வாங்கிய ஐரோப்பிய நாடுகள் அதனை தற்போது 650,000 ஆகக் குறைத்துள்ளன.

இதில் துருக்கியே ஈரானிடமிருந்து அதிக மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்கிறது. கடந்த ஆண்டு புள்ளி விபரத்தின்படி துருக்கி நாளொன்றுக்கு ஈரானிடம் இருந்து 200,000 எண்ணெய் பீப்பாய்களை இறக்குமதி செய்துள்ளது.

இதற்கு அடுத்ததாக கிரீஸ் நாளொன்றுக்கு 80,000 பீப்பாய்களையும் ஸ்பெயின் 70,000 எண்ணெய் பீப்பாய்களையும் இறக்குமதி செய்தன. எனினும் பிரான்ஸ், பிரிட்டன் ஆகியன ஈரான் எண்ணெய் இறக்குமதியை ஏற்கனவே குறைத்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை அதிகரித்துள்ளது. இதன்படி நேற்றைய தினத்தில் எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 121 டொலருக்கும் மேலாக பதிவாகியிருந்தது. இது கடந்த 9 மாதங்களில் பதிவான அதிகப்படியான விலையாகும்.

# தப்பி வந்த சவூதி ஊடகவியலாளர் மலேஷியாவில் பிடிபட்டார்!



முஹம்மது நபி (ஸல்) அவர்களை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட சவூதி ஊடகவியலாளரை மலேஷிய அரசு சவூதிக்கு நாடு கடத்தியுள்ளது.

சவூதி அரேபியாவில் இருந்து தப்பி வந்த ஹம்ஸா கஷ்காரி என்ற ஊடகவியலாளரை அண்மையில் மலேஷியா பொலிஸார் கைது செய்து உடனடியாக சவூதி அரேபியாவுக்கு நாடு கடத்தியுள்ளது. சவூதி - மலேசிய அரசுக்கு இடையில் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் இல்லாவிட்டாலும் முஸ்லிம் நாடுகள் என்ற அடிப்படையில் ஹம்ஸா கஷ்காரி சவூதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மலேசிய அரசு வட்டாரங்களில் இருந்து செய்தி வெளியாகியுள்ளது.

23 வயதான கஷ்காரி ஜித்தாவில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றில் பத்தி எழுத்தாளராக செயல்பட்டுள்ளார். இவர் அண்மையில் இடம் பெற்ற முஹம்மத் நபியின் பிறந்த தினத்தன்று, முஹம்மத் நபியை அவமதிக்கும் வகையில் தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதில் கஷ்காரி, "உங்களது பிறந்த நாளன்று, உங்களிலுள்ள போராளியை நான் விரும்புகிறேன். இந்த வகையில் நீங்கள் எப்போதும் எனக்கு ஊக்குவிப்பாக இருந்திருக்கிறீர்கள். ஆனால் உங்களைச் சுற்றி இருக்கும் தெய்வீகத் தன்மை எனக்கு பிடிக்கவில்லை. நான் உங்களை வழிபடமாட்டேன்" என குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கஷ்காரி முஹம்மத் நபியை அவமதிக்கும் வகையில் மூன்று கருத்துகளை டுவிட்டரில் வெளியிட்டிருந்தார். இந்த கருத்து வெளியாகி ஒரு தினத்திற்குள் இதற்கு பதிலளிக்கும் 30000 க்கும் மேற்பட்ட தகவல்கள் வெளியாயின. அதில் கஷ்காரிக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கும் தகவல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து தனது கருத்துக்கு மன்னிப்புக் கேட்ட கஷ்காரி, தான் கைதாகும் அபாயத்தை தவிர்க்க சவூதியை விட்டு மலேஷியா ஊடாக நியூஸிலாந்துக்கு தப்பிச் செல்லும் வழியில் பிடிபட்டார்.


இந்நிலையில், கஷ்காரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் சவூதியில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது எனக் கூறப்படுகின்றது.

மலேஷியாவின் இந்த செயற்பாட்டுக்கு சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமை அமைப்பு ஆகியன கண்டனம் வெளியிட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கூடா நட்பு கேடாய் முடியும்

இஸ்ரேல் – ஒரு வரையறுக்கப்பட்ட எல்லைக்கோடு இல்லாத நாடு. ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை பல முறை மீறிய நாடு. அப்பாவி குழந்தைகளை குறிவைத்து கொலை செய்வதில் வல்லவர்கள். பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவி செய்ய வரும் நிவாரண குழுக்களை சர்வதேச எல்லையில் வைத்து தாக்குபவர்கள் என பல விரும்பத்தகாத சிறப்புகளை கொண்ட நாடு. இந்த நாடு உருவாகிய விதமும் அதனை பாதுகாக்க இவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளும் சர்வதேச நாடுகளின் கடும் கண்டனத்தை சந்தித்து வருகின்றன. சுருக்கமாக சொல்வதென்றால் மத்திய ஆசியாவின் கேன்சர் தான் இஸ்ரேல். பலஸ்தீனியர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டைதான் இந்தியா பெரும்பாலும் எடுத்து வந்துள்ளது.












இன்றும் பலஸ்தீனியர்களுக்கான இந்தியாவின் உதவிகள் தொடரத்தான் செய்கின்றன. 1992 வரை இஸ்ரேலுடன் இந்தியா எவ்வித தூதரக உறவுகளையும் கொண்டிருக்கவில்லை. நரசிம்மராவ் தலைமையிலான அப்போதைய காங்கிரஸ் அரசு இஸ்ரேலுடன் தூதரக உறவுகளை ஏற்படுத்திக் கொண்டது. தொடர்ந்து ஆட்சிக்கு வந்த பாஜக இதனை வலுப்படுத்தியது. பின்னர் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு இதனை தொடர்கிறது.

விவசாயம், பாதுகாப்பு, தீவிரவாத எதிர்ப்பு என பல துறைகளிலும் இரு நாடுகளுக்குமான உறவு வலுப்பெற்று வருகிறது. இஸ்ரேல் பயன்படுத்தி வரும் நவீன விசாரணை முறைகள்தான் அந்நாட்டுடன் நாங்கள் நெருங்கிய உறவு வைத்திருக்க காரணம் என்று நமது அதிகாரிகள் பெரும்பாலும் கூறி வருகின்றனர். இந்தியாவிற்கு ஆயுதங்களை விற்பனை செய்யும் நாடுகள் பட்டியலில் இஸ்ரேல் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது. இராணுவ தளவாடங்கள் விற்பனையையும் தாண்டி தற்போது ஆராய்ச்சி துறையிலும் சேர்ந்து செயல்பட இரு நாடுகளும் முயற்சித்து வருகின்றன.

இத்துடன் இஸ்ரேலுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை செய்வதற்கும் இந்தியா முயற்சித்து வருகிறது. 1992ஆம் ஆண்டு இருநாடுகளுக்கும் இடையேயான வியாபாரம் இருநூறு மில்லியன் டாலர்களாக இருந்தது. சென்ற வருடம் இது ஐந்து பில்லியன் டாலர் என்ற இலக்கை அடைந்தது. இந்த ஒப்பந்தம் கையெழுத்தானால் வர்த்தக தொகை இன்னும் அதிகரிக்கும். 'இந்தியாவின் முக்கியமான கூட்டாளி இஸ்ரேல்' என்று இஸ்ரேலுக்கான இந்தியாவின் தூதர் நவ்தேஜ் சர்னா சமீபத்தில் கூறினார். உறவை மேலும் வலுப்படுத்த வெளியுறவு துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவும் தற்போது இஸ்ரேலுக்கு பயணத்தை மேற்கொண்டுள்ளார். கடந்த பத்து ஆண்டுகளில் இஸ்ரேலுக்கு செல்லும் முதல் வெளியுறவு துறை அமைச்சர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜுலை 2000ல் அப்போதைய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங் இஸ்ரேலுக்கு பயணத்தை மேற்கொண்டார். தூதரக உறவுகள் ஏற்பட்டு இருபது ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் இருநாடுகளுக்குமான உறவு இன்னும் பலமாகும் என்பதைதான் இந்த நிகழ்வுகள் உணர்த்துகின்றன. ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் நட்பு கொள்வதில் என்ன தவறு? இதனை ஏன் நாம் பெரிதாக எடுத்து கொள்ள வேண்டும்? முதலில் நாம் கூறிய வரிகளை மீண்டும் ஒரு முறை வாசித்தால் இதற்கான பதில் கிடைத்து விடும். அத்துடன் இஸ்ரேலுடன் நாம் கொண்டுள்ள உறவுக்கு நாம் அனுபவித்து வரும் பலனைத்தான் சமீப ஆண்டுகளில் கண்டு வருகிறோம். கடந்த சில ஆண்டுகளாக நமது நாட்டில் குண்டு வெடிப்புகள் அதிக அளவில் நடைபெற்று வருவதை நாம் கண்டு வருகிறோம். இதற்கு காரணமானவர்களில் சிலர் கைதும் செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் இஸ்ரேலுடன் நெருங்கிய தொடர்பை வைத்து கொள்ள வேண்டும் என்பதில் மிகவும் முனைப்புடன் இருந்துள்ளனர் என்பதை விசாரணை தெரியபடுத்துகிறது. இவர்களின் குருநாதர்கள் 1970-களின் இறுதியிலேயே இஸ்ரேலுடன் கள்ள தொடர்பு கொண்டவர்கள் என்பதை நாம் மறந்து விட முடியாது. நாட்டின் ஸ்திரதன்மையையும் முன்னேற்றத்தையும் குலைப்பதற்கு இவர்கள் இஸ்ரேலுடன் கைகோர்த்து செயல்பட்டு வருகின்றனர் என்பதைதான் இது காட்டுகிறது.

அத்துடன் நவம்பர் 2008 மும்பையில் நடைபெற்ற தாக்குதல்களின் நமக்கு ஏற்படுத்தும் சந்தேகங்கள். இதில் சந்தேகத்திற்கு இடமாகியுள்ள இஸ்ரேலின் தொடர்பு இன்னும் முழுமையாக விசாரிக்கப்படவில்லை. மும்பை நகரில் யூதர்கள் குடியிருக்கும் பகுதியில் நடைபெறும் விஷயங்கள் மர்மங்கள் நிறைந்ததாக இருப்பதை அப்பகுதி மக்களே கூறியுள்ளனர். நாட்டின் பாதுகாப்பை விலையாக கொடுத்து தான் இஸ்ரேலின் நவீன தொழில்நுட்பங்களை வாங்க வேண்டும் என்பதை மனசாட்சியுள்ள எந்த இந்தியனும் ஏற்றுக் கொள்ள மாட்டான். நமது நாட்டின் நிலை இதுவென்றால், அண்டை நாடான பாகிஸ்தானும் இதற்கு விதிவிலக்கில்லாமல் செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே அமெரிக்காவுடன் கொண்ட நட்பிற்கான விலையை அந்நாடு கொடுத்து வருகிறது. பொதுமக்களுக்கு பாதுகாப்பில்லை, தலைவர்களுக்கு கண்ணியம் இல்லை என்ற நிலைதான் அங்கு உள்ளது. இந்நிலையில் முன்னாள் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் சமீபத்தில் கூறிய கருத்துக்களை கேட்டு சிரிப்பதா இல்லை அழுவதா என்று தெரியவில்லை.

'இந்தியாவை எதிர்கொள்ள இஸ்ரேலுடன் நாம் நெருங்கிய உறவை கொள்ள வேண்டும்' என்பதுதான் அவரது வாதம். அறிவுடைய எந்த மனிதனும் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டான். பாகிஸ்தானை அழிவின் பாதைக்கு இழுத்து செல்லும் வாக்காகவே இது நமக்கு படுகிறது. ஒருவரையொருவர் பகைத்து கொள்வதற்கு இவர்கள் இஸ்ரேலை நாடிச் செல்வது ஆச்சர்யமாக உள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது ஏற்பட்டு வரும் மாற்றங்கள் இஸ்ரேலுக்கு பெரும் தலைவலியாக அமைந்துள்ளன. தங்களுக்கு சாதகமான ஆட்சியாளர்களை வைத்து கொண்டு அமெரிக்காவும் இஸ்ரேலும் போட்டு வந்த ஆட்டங்கள் தற்போது முடிவுக்கு வந்துள்ளன. எகிப்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் இஸ்ரேலின் தூக்கத்தை கெடுத்துள்ளது. முபாரக்கை போன்று இவர்கள் தனக்கு தலையசைக்க மாட்டார்கள் என்பதை இஸ்ரேல் நன்றாகவே புரிந்துள்ளது. சற்று தொலைவில் உள்ள துனிசியாவிலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. மற்ற நாடுகளிலும் இது தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. துருக்கியுடனான இஸ்ரேலின் உறவு ஏறத்தாழ முடிவுக்கு வந்துவிட்டது என்று தான் சொல்ல வேண்டும். தங்கள் சகாக்களின் நிலையை கண்ட அரபுலக ஆட்சியாளர்கள் தற்போது சற்று அடக்கியே வாசிக்கின்றனர். தற்போது இஸ்ரேல் தனித்து விடப்பட்டுள்ளது. மத்திய கிழக்கில் தனக்கு நண்பர்களும் இல்லை, ஆதரவாளர்களும் இல்லை. தன்னுடைய ஏகபோக அதிகாரத்தை இனியும் நடத்த முடியாது என்பதை அறிந்துள்ள இஸ்ரேல் புதிய நெருக்கமான உறவுகளை தேட ஆரம்பித்துள்ளது. இவர்களின் இந்த சூழ்ச்சிக்குதான் இந்தியாவும் பாகிஸ்தானும் பலியாகும் நிலையில் உள்ளன. இஸ்ரேல் உடனான உறவு துணை கண்டத்தில் அமைதியற்ற நிலையைதான் ஏற்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

வளரும் நாடுகள் பட்டியலில் உள்ள பெரும்பான்மையான நாடுகள் தற்போது இஸ்ரேலுக்கு எதிராகவே உள்ளன. இந்நிலையில் இஸ்ரேலுடன் நாம் உறவு கொண்டால் அது இந்நாடுகளுடனான நமது உறவிலும் விரிசலை ஏற்படுத்தும். ஆக இஸ்ரேல் என்பது தற்போது மூழ்கி கொண்டிருக்கும் ஒரு கப்பல். அதில் நமது நாடு ஏறுவதை நம்மால் ஒரு போதும் அனுமதிக்க முடியாது. ஆட்சியாளர்கள் இதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அதே சமயம் பொதுமக்களும் இதில் உஷாராக இருக்க வேண்டும்.

ஏர்வை ரியாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு மார்ச் 2012

# பொட்டல் காடு

அது ஒரு திறந்தவெளி. எங்கு நின்று பார்த்தாலும் வானமே தெரிந்தது. பூமித்தாயின் முகமெங்கும் செம்மண் கொட்டப்பட்டு, அவள் முகத்தில் காணப்படும் பருக்கள் போல காணிக்கற்கள் எங்கு பார்த்தாலும் நடப்பட்டிருந்தன. அந்தக் காணிக்கற்களே அங்கு வருவோருக்கு வரவேற்பாளர்களாகவும் வழிகாட்டிகளாகவும் இருந்தன.

அந்தத் திறந்தவெளியில் இரண்டே இரண்டு மரங்கள் மட்டும் இருந்தன. ஒன்று அரச மரம். இன்னொன்று அப்போதுதான் வளர்ந்து வரும் வேப்பமரம். ஒருநாள் அந்த இடத்தைப் பார்க்க இரண்டு மனிதர்கள் வந்தார்கள். அவர்கள் அந்த மரங்களைச் சுற்றி சுற்றிப் பார்த்துவிட்டு ஏதேதோ பேசினார்கள். சிறிது நேரம் கழித்துச் சென்று விட்டார்கள். அவர்கள் போனபிறகு, இளமையாக இருந்த வேப்பமரம் அரசமரத்தைப் பார்த்துக் கேட்டது. "அரச மரமே, நீ இந்த இடத்தில் ரொம்ப நாளாய் இருக்கிறாய்... எவ்வளவோ பேர்களைப் பார்த்திருப்பாய்... இப்போ வந்தாங்களே, இந்த இரண்டு மனிதர்களும் ஏதோ. காடு, காடுன்னு பேசிக்கிட்டாங்களே. காடுன்னு ஏதாவது இந்த இடத்திலே இருந்திச்சா. காடுன்னா என்ன? அது எப்படியிருக்கும்?" என்று கேட்டது.

இதைக் கேட்ட அரசமரத்துக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. தன் துன்பம் அந்த வளரும் வேப்பமரத்திற்கும் வரக் கூடாதுன்னு தன் துக்கத்தை அடக்கிக் கொண்டு சொன்னது. "ஆமாம், இங்கே பச்சைப் பசேல்னு ஓர் அடர்ந்த காடு இருந்தது. காடு என்றால் எங்கு பார்த்தாலும் நிறைய மரங்கள், செடிகொடிகள், மணம் வீசும் பூக்கள் எல்லாம் இருக்கும். இயற்கைச் செல்வங்கள் எழில் தோற்றமாய் காண்போரைக் கவரும் வண்ணமயமாய் இருக்கும். பூமித்தாய் பச்சைப் பட்டாடை உடுத்தியது போல அழகாக ஜொலிப்பாள். அதனுள் வன விலங்குகள், பறவையினங்கள், என்னென்ன எண்ணற்ற உயிரினங்கள் வசித்துக் கொண்டு, ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து வாழ்ந்து வந்தன. அவர்கள் நீர் பருக பக்கத்தில் ஒரு குளமும் இருந்தது" என்றது. "இப்போ, நாம இரண்டு பேருந்தானே இங்கே இருக்கோம்! அவங்களையெல்லாம் காண முடியவில்லையே... எங்கே போனாங்க?" என்றது வேப்ப மரம் அப்பாவியாக.

"சொல்றேன்... கேளு..." என்று அரச மரம் கண்களைத் துடைத்துக் கொண்டு மீண்டும் சொல்ல ஆரம்பித்தது. "நிறைய மரங்கள் இருக்கும்னு சொன்னேன் இல்லையா? இந்தக் காட்டிலே சந்தனமரம், புளிய மரம், சவுக்கு மரம், மூங்கில் மரம், புன்னை மரம், ஆலமரம் இன்னும் எனக்குப் பெயர் தெரியாத பல மரங்கள் இருந்தன. அந்த மரங்களின் மீது பறவைகள் எல்லாம் கூடு கட்டி தங்கள் குடும்பத்துடன் சந்தோசமாக வாழ்ந்து வந்தன. நாங்கள் தரும் காய்களையும் பழங்களையும் அந்தப் பறவைகள் கொத்திக் கொத்தித் தின்னு பசியாறும். தாயும் சேயும் எங்கள் பாதுகாப்பிலே இருப்பாங்க. அந்தப் பறவைகள் தங்கள் குஞ்சுகளை எல்லாம் எங்கக் கிட்டதான் பாதுகாப்பா விட்டு விட்டு காலையிலே இரை தேடப் போவாங்க. இரை எல்லாம் தேடி எடுத்துக் கொண்டு வந்து அந்தப் பறவைகள் தங்கள் குஞ்சுகளுக்கு ஊட்டும். இரவிலே ஏதோ, ஏதோ கதைகளை எல்லாம் சொல்லித் தூங்க வைக்கும். நாங்களும் அந்தக் கதைகளை எல்லாம் கேட்டு மனசுக்குள்ளே சிரித்துக் கொள்வோம். அப்போ, நாங்கள் எங்க இலையை அசைச்சு, அசைச்சுக் காத்து வர வெச்சுத் தாலாட்டி, அந்தக் குஞ்சுகளை எல்லாம் தூங்க வைப்போம். காலையிலே சூரிய ஒளிபட்டவுடன் கீச் கீச்சுன்னு கத்திக் கொண்டு இரையைத் தேடி புறப்படும். எங்களுக்கெல்லாம் அற்புத ரீங்காரமான அந்த ஒலி, சுப்ரபாதமாக இருக்கும்." "காட்டிலே நிறைய நடமாடும் வனவிலங்குகள் எல்லாம் இருந்ததுன்னு சொன்னீங்களே, அவங்களுக்கு எந்த ஒத்தாசையும் செய்ய மாட்டீங்களா?" என்று கேட்டது வேப்பமரம்.

"நாங்கள் என்ன மனுசங்களா? அபயம் என்று வந்தவர்களுக்கு அடைக்கலம் தராமல் இருப்பதற்கு?" என்று கோபமாய் கேட்டது அரச மரம்.

"அந்த விலங்குகள் எல்லாம் என்ன பண்ணும்" என்றது வேப்பமரம்.

"அந்த விலங்குகள் எல்லாம் எங்களைச் சுற்றிச் சுற்றி விளையாடும். இரையைத் தேடி அங்குமிங்கும் அலைஞ்சிட்டு, எங்கள் நிழலிலே வந்து இளைப்பாறும். அப்போது நாங்கள் எங்கள் இலையை



அசைச்சுக் காற்றை வரவைச்சு அவைகளை தூங்கவைப்போம். அது மட்டுமா, எங்கள் இலைகளையும் காய்களையும் பழங்களையும் அவைகளுக்கு உணவாகக் கொடுப்போம்" என்றது அரச மரம்.

"இப்போ உங்களைத் தவிர, இங்கே யாருமே இல்லையே! அந்த மரங்களும் பறவையினங்களும் விலங்குகளும் காணவில்லையே? எங்கே போனாங்க?" என்றது வேப்பமரம்.

"அதை ஏன் கேக்கிறே?" என்று மூக்கைச் சிந்தி அழுதவாறே, அரசமரம் மேலே சொல்ல ஆரம்பித்தது.

"ஒருநாள் இந்தக் காட்டைச் சுற்றிப் பார்க்க மனுசன்கள் எல்லாம் வந்தாங்க... அவங்களுக்குள்ளே ஏதோ பேசிக்கிட்டாங்க. நம்மைப் பார்த்து ஏதோ சந்தோசமா பேசிக்கிறாங்க என்றுதான் நாங்கள் இருந்தோம். ஆனால், கொஞ்ச நாள் கழிச்சி ஒரு பத்து இருபது பேர் கையிலே வாள், கத்தி, கோடாரி, கடப்பாறை போன்ற பயங்கரமான ஆயுதங்களை எல்லாம் கொண்டு வந்தாங்க... நாங்கள் பயந்து போனோம். ஐயோ, நான் எப்படிச் சொல்வேன்? சுவிரக்கம் இல்லாமல் அந்த மனுசன்கள் இங்கிருந்த மரங்களையெல்லாம் வெட்ட ஆரம்பிச்சாங்க. யாரும் ஒன்னும் பேசிக்கல. பாவம், அந்தப் பறவையினங்கள்தான் கீச் கீச்சுன்னு கத்தி, அங்குமிங்கும் பறந்தாங்க. விலங்கினங்கள் பயந்து அலறியபடி, போக இடம் தெரியாமல் ஓடின. அவங்களால அதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

மற்ற தரைவாழ் உயிரினங்கள் அவைகளின் காலடியில் சிக்கி மாண்டன. எங்கும் மரண ஓலம்!



காலையில் பசுமையா இருந்த மரங்கள் எல்லாம் மாலையிலே வாடி வதங்கிப் போய், கட்டாந்தரையிலே படுக்க வச்சிருந்தாங்க.

கொஞ்ச நேரத்திலே அவைகளை எல்லாம் துண்டு துண்டா வெட்டி, பெரிய பெரிய வாகனங்களில் ஏத்தி, எங்கோ அனுப்பி வச்சுட்டாங்க. பறவைகள் கத்தி கத்திப் பார்த்துட்டு எங்கேயோ பறந்து போச்சுக. நான் கிழமா இருந்ததாலே, என்னை மட்டும் விட்டுட்டாங்க" என்றது அரசமரம்.

"அந்த மனிதர்கள் மரங்களை வெட்டும் போது, காட்டுராஜா சிங்கம், புலி, சிறுத்தை, படையையே நடுங்க வைக்கும் பாம்பு இனங்கள் ஆகியவை சும்மாவா இருந்திச்சி" என்று கேட்டது வேப்பமரம்.

"அவுங்க என்ன செய்வாங்க பாவம். உர்... உர், புஸ், புஸ்ன்னு கத்திக்கிட்டு, அந்த மனுசங்க பின்னாலே ஓடினாங்க. ஆனால், அந்த மனுசங்க கையிலேதான் ஏதோ ஏதோ ஆயுதங்கள் இருந்திச்சே..! அதை வச்சு எல்லாரையும் கட்டும், வெட்டியும் சாகடிச்சிட்டாங்க. அவங்க திடீரென நடத்திய தாக்குதலிலே என்ன பண்றதுன்னு தெரியாம விலங்கினங்கள் எல்லாம் மாண்டு போயின. அப்போது, இங்கிருந்த பூமித்தாயின் முகம் சிவப்பாயிடுச்சி. மற்ற விலங்குகளும், பறவைகளும் பயந்து கத்திபடி கலைந்து ஓடின. அப்போ போனதுக, இன்னும் திரும்பி வரவேயில்லை. நான் இனி அவர்களை என்று காண்பேனோ? இந்தத் தாத்தாவைக் காண அவர்களுக்கு ஆசை இல்லையா..?

நான் சொன்ன இந்த அடர்ந்த காட்டில் நான் மட்டும் இப்போ தனியா இருக்கேன். நீ இப்போதுதான் வளர்ந்து வர. இருந்த காடுகளையும் வளச் செல்வங்களையும் வளர்ச்சி என்ற பெயரில் அழிச்சிட்டு இப்போ புவி வெப்பம்... புவி வெப்பம்... என்று இந்த மனுசன்கள் கூக்குரலிடுகிறார்கள். தன்வினை தன்னைச் சுடும் என்பார்களே அது இதுதான் போலிருக்கிறது.


இப்போ பருவமழையும் முறை தவறிப் பெய்யுது. பூமித்தாயும் பாலைவனமாயிட்டாங்க. காடுகளை அழித்தால் சுற்றுச்சூழல், பறவையினங்கள், வனவிலங்குகள் பாதிக்கப்படும் என்ற கவலை மனிதனுக்கு இல்லை. அதனாலே நமக்கு ஆதரவாக, இப்போ இங்கு யாருமில்லை..." என்றது அரசமரம்.

இதைக் கேட்ட வேப்பமரத்திற்கு அழுகை அழுகையா வந்தது.

அப்போது, முன்னர் இந்த இரண்டு மரங்களையும் இடத்தையும் பார்த்துச் சென்ற இரண்டு பேர் அங்கு வந்தார்கள். "பல டன் தேறும்" என்று பேசியபடி அந்த அரசமரத்தையும், வளர்ந்து வரும் வேப்பமரத்தையும் வெட்ட ஆரம்பித்தார்கள். அவைகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க அங்கு எந்தப் பறவையினங்களும் இல்லை. உர் உர் என்று துரத்தியடிக்க விலங்கினங்களும் இல்லை. எல்லாம் வெட்டி முடித்து வேரோடும், வேரடி மண்ணோடும் பிடுங்கிய பின் அவைகள் அனாதைப் பிணங்களாக வண்டியில் ஏற்றப்பட்டன.

அந்த அடர்ந்த காடு, இன்று பொட்டல்காடாகி விட்டது. அந்த இடத்தில் பூமித்தாயின் முகத்தில்.. இரண்டு புதிய பருக்களாக, புதிய காணிக்கற்கள் நடப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொலம்பஸ்ஸின் மறு பக்கம்

அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர் கொலம்பஸ் எனப் பெருமைமிகு அறிமுகத்தை மட்டுமே பெற்றிருக்கும் பலருக்கும் அதிர்ச்சி தரக் கூடிய வகையில் கொலம்பஸ்ஸின் மற்றுமொரு முகத்தை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்துகின்றார் இக்கட்டுரையாளர்.

வருடந்தோறும் அக்டோபர் 12ந்தேதி கொலம்பஸ் நினைவு கூரப்படுகின்றார். கொலம்பஸ் கொண்டாடப்படவேண்டியவரா என்ற கேள்வியைத் தோற்றுவிக்கும் இக்கட்டுரையை இங்கு மீள்பதிவு செய்ய அனுமதியளித்த கட்டுரையாளருக்கான நன்றிகளுடன் இங்கு பதிவு செய்கின்றோம்.

அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 12ம் தேதி, கொலம்பஸ் என்ற கொலை வெறியனை நினைவு கூர்ந்து விழா எடுக்கிறார்கள். "கொலம்பஸ் தினம்" ஐக்கிய அமெரிக்க நாடுகளில் ஒரு முக்கியமான விடுமுறை தினம். கொலம்பஸ் அமெரிக்காவைக் "கண்டுபிடித்த" கதையை பாலர் பாடசாலையில் இருந்தே சொல்லிக் கொடுக்கிறார்கள். யார் இந்த கொலம்பஸ்? கரீபியன் தீவுகளில் வாழ்ந்த இரண்டு லட்சம் மக்களை இரு வருடங்களில் இனவழிப்பு செய்த சாதனையாளன். ஒன்பது வயது சிறுமிகளைக் கூட பாலியல் அடிமைகளாக்கிய கயவன். அமெரிக்காவில் முதன் முதலாக அடிமை வாணிபத்தை அறிமுகம் செய்த அயோக்கியன். இன்று உயிரோடிருந்தால், மனித குலத்திற்கு எதிரான குற்றம் இழைத்ததாக சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருப்பான்.

அதற்கெல்லாம் ஆதாரம் உண்டா? கொலம்பஸ் தானே எழுதி வைத்த தினக்குறிப்புகள் இருக்கின்றன. கொலம்பஸின் ஆட்களில் ஒருவரான பார்த்தலோமே லாஸ் காசாஸ், கொடுமைகளால் மனம்வருந்தி எழுதிய குறிப்புகள் இருக்கின்றன. அவற்றில் அமெரிக்க மக்களை இனவழிப்பு செய்த கொடூரங்கள் விலாவாரியாக எழுதப்பட்டுள்ளன. இன்று யாரும் இவற்றை நினைவு கூர விரும்புவதில்லை. வரலாற்றுப் பாடநூல்களும் சம்பிரதாயத்திற்காக என்றாலும் குறிப்பிடுவதில்லை.

இனவழிப்பு செய்த கொலம்பஸை தேசிய நாயகனாக விழா எடுத்துக் கௌரவிக்கும் வெட்கக்கேடு அமெரிக்காவில் நடக்கின்றது. இதை அறியாத பல தமிழர்கள், அமெரிக்கர்கள் நாகரிகமானவர்கள் என்று இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.


அமெரிக்காவில் கொலம்பஸ் தினம் கொண்டாடப்பட வேண்டுமென அரசுக்கு பிரேரணை செய்தது Knights of Columbus என்ற அமைப்பு. இது ஒரு வெளிநாட்டவருக்கெதிரான நிறவெறிக் கொள்கை கொண்ட கத்தோலிக்க அமைப்பு. அவர்கள் கொலம்பஸை தமது பிள்ளைகளுக்கு கத்தோலிக்க ஆதர்ச நாயகனாக காட்டினார்கள். 1934ம் ஆண்டு, ஜனாதிபதி பிராங்கலின் ரூஸ்வெல்ட் கொலம்பஸ் தினம் என்று விடுமுறை நாளை உத்தியோகபூர்வமாக அறிவித்தார். முதன் முதலாக அமெரிக்க கண்டத்தை கண்டுபிடித்தது கொலம்பஸ் அல்ல என்பது இன்று அனைவருக்கும் தெரிந்த உண்மை. செவ்விந்திய பூர்வீக குடிகள், பதினான்காயிரம் வருடங்களுக்கு முன்பே கண்டுபிடித்து விட்டார்கள்.

கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்த முதல் ஐரோப்பியர் என்றும் கூற முடியாது. Leif Ericson என்ற கடலோடி தலைமையில், ஸ்கண்டிநேவியாவில் இருந்து வந்த வைகிங் மக்கள், கனடாவில் நியூபவுன்லாந்து மாகாணத்தில் குடியேறி வாழ்ந்தனர்.

12 அக்டோபர் 1492ம் ஆண்டு, கொலம்பஸ் பஹாமாஸ் தீவுகளில் காலடி எடுத்து வைத்த காலத்தில், அங்கே அரவாக்ஸ் இன மக்கள் வாழ்ந்து வந்தார்கள். சமாதான விரும்பிகளான அந்த மக்களைப் பற்றி கொலம்பஸ் தினக்குறிப்பில் இவ்வாறு எழுதி வைத்தார். "அவர்கள் தம்மிடம் இருப்பதை எல்லோருடனும் பகிர்ந்து கொள்கிறார்கள். கேட்பவர்கெல்லாம் இல்லை என்று மறுப்புக் கூறுவதில்லை....."

அரவாக்ஸ் மக்களிடம் எந்த ஆயுதமும் இல்லை. அவர்களது சமூகத்தில் குற்றவாளிகள் இல்லை, கைதிகள் இல்லை, சிறைகள் இல்லை. எமது கப்பலான சான்டா மரியா கரைதட்டி உடைந்த பொழுது, கப்பலில் வந்தோரையும், பொருட்களையும் மீட்க அரவாக்ஸ் மக்கள் உதவி செய்தனர். கப்பலில் இருந்த ஒரு பொருளையேனும் அவர்கள் ஒளித்து வைக்கவில்லை...

இவ்வாறு மனமுவந்து உதவி செய்த நேர்மையான அரவாக்ஸ் மக்களுக்கு கொலம்பஸ் செய்த கைம்மாறு என்ன? அந்த மக்களை அடிமைகளாக்கி தங்கச் சுரங்கங்களில் கட்டாய வேலை வாங்கினான். இருப்பதை பங்கிட்டு மகிழ்ச்சியாக வாழ்ந்த மக்கள், இன்னலுற்று மனமொடிந்து தற்கொலை செய்து கொண்டார்கள். ஒரு கட்டத்தில் நூற்றுக் கணக்கானோர் கூட்டாக தற்கொலை செய்தனர். அரவாக்ஸ் பெண்களை கொலம்பஸின் ஆட்கள் பாலியல் அடிமைகளாக வைத்திருந்தார்கள். அதைப் பற்றி கொலம்பஸ் இவ்வாறு எழுதியுள்ளார்: "இளம் பெண்களுக்கான கேள்வி அதிகரித்த காரணத்தால், அவர்கள் 9, 10 வயது சிறுமிகளை தேடிச் சென்றார்கள்..."




அரவாக்ஸ் அடிமைகளை இறக்கும் வரை இரத்தத்தை பிழிந்து வேலை வாங்கினார்கள். ஒரு செவ்விந்திய அடிமை தினசரி குறிப்பிட்ட கோட்டா தங்கம் எடுத்துக் கொடுக்கா விட்டால், தண்டனையாக இரு கைகளையும் வெட்டினார்கள். அடிமை முறைக்கு எதிர்ப்புக் காட்டிய அரவாக்ஸ் தொழிலாளியின் மூக்கையும், காதுகளையும் அறுத்தனர். அடிமை விலங்கை உடைத்துக் கொண்டு தப்பியோடி பிடிபட்டால் உயிரோடு கொளுத்தினார்கள். கொலம்பஸ் தனது இரண்டாவது பயணத்தில் வேட்டை நாய்களை கொண்டு வந்தான். தப்பியோடும் அடிமைகள் மீது நாய்களை அவிழ்த்து விடுவார்கள். தப்பியோடியவர்களை வேட்டையாடும் நாய்கள், அவர்களை கடித்துக் குதறி, கை வேறு, கால் வேறாக பிய்த்து விடும். கொலம்பஸின் ஆட்கள் தமது வேட்டை நாய்களுக்கு மாமிச உணவு தீர்ந்து விட்டால், அரவாக்ஸ் இனக் குழந்தைகளை வெட்டி உணவளித்தார்கள்! ஸ்பெயினில் இருந்து நீண்ட கடற்பயணம் செய்து வந்தவர்களை விருந்தாளிகளாக ஏற்று உபசரித்த அரவாக்ஸ் மக்களுக்கு, கொலம்பஸ் செய்த நன்றிக்கடன் அப்படியானது. தான் செய்த கொடூரங்களுக்காக கொலம்பஸ் வருந்தியதாக தெரியவில்லை. கிறிஸ்தவர்களை அடிமைகளாக வைத்திருக்க கத்தோலிக்க சட்டம் அனுமதிக்கவில்லை. அதற்காக கொலம்பஸ் ஒரு தந்திரம் செய்தான். செவ்விந்திய குடிமக்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்கு தடை விதித்தான். கிறிஸ்தவர்கள் அல்லாதோரை கொன்றாலும் பாவம் இல்லை அல்லவா?



ஜேர்மனியில் ஹிட்லரை தேசிய நாயகனாக கொண்டாடினால் உலகம் எந்தளவு அதிர்ச்சி அடையும்? மனித நேயம் மிக்கவர்களாக உலகிற்கு காட்டிக் கொள்ளும் அமெரிக்கர்கள், கொலைவெறியன் கொலம்பஸை தேசிய நாயகனாக கொண்டாடுவதைக் கண்டு யாரும் அதிர்ச்சி அடையவில்லை. ஏன்? உலக வரலாறு முழுவதும் இனப்படுகொலையாளர்கள் மாவீரர்களாக போற்றப்பட்டு வந்திருக்கிறார்கள். இதையெல்லாம் தெரிந்தாலும் மூடி மறைக்கும் அறிவுஜீவிகள் தான் ஸ்டாலின், மாவோ எத்தனை பேரை கொலை செய்தார்கள் என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். "மேலைத்தேய நலன்களுக்காக கொலை செய்பவர்கள் பரிசுத்தவான்கள். அதனால் அவர்களுக்கு பாவமன்னிப்பு வழங்கலாம்."

மேலதிக தகவல்களுக்கு :

Genocide of Christopher Columbus

Slavery and Colonialism Make Up the True Legacy of Columbus


Columbus Day

Knights of Columbus

Leif Ericson

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேகுவேரா என்ற மனிதாபிமானி



"இலட்சக்கணக்கான பக்கங்களில், ஆயிரம் கோடிகள் வேண்டுமானாலும் சேகுவேராவைப்பற்றி எழுதிக் கொண்டிருக்கலாம்" என்கிறார் எழுத்தாளர் காப்ரியேல் கார்சியா மார்கோஸ். மேலும் மேலும் அறிய வேண்டிய ஏதோ ஒன்றை அவரது மரணம் சொல்லிக்கொண்டிருக்கிறது. காட்டுப்பூச்சிகள் கடித்து உடலெல்லாம் வீங்கிப் போயிருந்தும், பசிக்கு வேறு வழியின்றி குதிரை மாமிசம் சாப்பிட்டு வயிற்று வலியில் அவதிப்படுகிறார். மழையும் வெயிலுமாய் உயர்ந்து நிற்கிற மலைவெளிகளில் ஆஸ்த்துமாவோடு மூச்சிரைக்க நடக்கிறார். அதற்கு முன்பு கியூபாவின் அமைச்சராக, விமானங்களில் பறந்து உலகத் தலைவர்களோடு கைகுலுக்கி பேசிக் கொண்டிருந்தவர் அவர். தன் குழந்தைகளை கொஞ்சி அரவணைத்துக் கொண்டவர் அவர். எல்லாவற்றையும் ஒருநாள் விலக்கிவிட்டு மீண்டும் காடுகளை நோக்கி துப்பாக்கியோடு செல்கிறார். எல்லோருக்குமான ஒரு கனவு உலகத்தை படைக்க வேண்டும் என்னும் தணியாத பேராசையின் பயணம் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டம். தவம் போலச் செய்கிறார். தன்னை முன்னிறுத்தி, தன்னையே பலியாக்கி வெளிச்சத்தைக் காட்டுகிற வேள்விதான் அது. கடைசி வரைக்கும் அவரது கண்கள் மின்னிக் கொண்டிருக்கின்றன. மார்கோஸ் அதைப் பார்த்திருக்க வேண்டும்.

புரட்சிகர வாழ்க்கை என்பது பல சிரமங்கள் நிறைந்தது. அவ்வாறுக் கையில் அகப்படுவோரின் உயிருக்கு உத்தரவாதமும் கிடையாது. ஆனால் அத்தகைய புரட்சியாளர்களிலும் ஒருபடி மேலே சென்று நன்கு அறிந்தே தனது உயிரை அர்ப்பணித்தவர்தான் சேகுவேரா. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஏராளமான வாய்ப்புகள் இருந்தும் அவற்றைத் தூக்கி எறிந்து விட்டு தனது இன்னுயிரைப் பொருட்படுத்தாது தனது முடிவை நோக்கிய பயணத்தை ஒரு லட்சியத்திற்காக மிக வேகமாக தொடங்கியவர் அவர்.

சேகுவேரா பொலிவியா செல்லும் திட்டத்தை தெரிவித்த போது பிடல் காஸ்ட்ரோ தனது தயக்கத்தை வெளிப்படுத்தினார். "உங்களைப் பொறுத்த வரையில் கியூபா விடுதலையை சாதிப்பது என்ற உங்களது எல்லாம் நிறைவேறிவிட்டது. இனி அந்த நாட்டை புனரமைக்கும் மாபெரும் பணி உங்கள் முன் உள்ளது. ஆனால் என்னைப் பொறுத்தவரை என் கடமை முடிந்துவிட்டதாக நான் எண்ண வில்லை. எனவே நான் பொலிவியா செல்கிறேன்" என்று ஒரு கடிதம் மூலம் பிடல் காஸ்ட்ரோவிடம் சே தெரிவித்த போது "பொலிவியாவின் சமூக மாற்றம் ஏற்படுவதற்கான புறச்சூழ்நிலைகள் கனிந்துள்ளனவா?" என்று பிடல் காஸ்ட்ரோ கேட்டார். "அவ்வாறு காலம் கனியும் என்று காத்திருந்தால் 50 ஆண்டுகளானாலும்கூட அது கனியாது" என பிடலிடம் கூறிவிட்டுச் சென்றார் சே. சேகுவேராவைப் பொறுத்தவரை அத்தனை அவசரமாக பொலிவியாவிற்கு சென்று அத்தனை பெரிய இடரை எதிர்கொண்டிருக்க வேண்டியதேயில்லை. என்றாலும் தெரிந்தே தனது உயிரைப் பணயமாகக் கேட்கும் ஒரு லட்சியத்தை நோக்கி திடசங்கற்பத்துடன் அவர் புறப்பட்டார்.

மரணத்தையே துச்சமெனக் கருதும் இத்தகைய மனப்பான்மையால் சே உலகெங்கிலும் உள்ள இளம் புரட்சியாளர்களின் லட்சிய முன்னோடியாக விளங்குகிறார். சாதாரண மனிதர்களைப் பொறுத்த வரையில் இந்த குணம் நினைத்துப் பார்க்கவும் முடியாதது. புரட்சியாளர்களைப் பொறுத்தவரையிலும் கூட இது ஒரு அருங்குணமே. லட்சியத்துடன் ஒருவர் தன்னை முழுமையாக இணைத்துக் கொள்ளும்போதே இத்தகைய அருங்குணங்கள் உருவாகின்றன. அதைப் புரிந்து கொள்ள முடியாத பல சாதாரண மனிதர்கள் அதனை பைத்தியக்காரத்தனம் என்று கூறுகின்றனர். அதற்கு சே அளித்த பதில் மிகவும் சுவையானது. "இத்தகைய பைத்தியக்காரத் தனங்களை ஏராளம் கொண்டிருப்பது நல்லதே" என்று அவர் கூறினார்.

சே குவேராவை தங்களது ஆதர்ச சக்தியாக ஏற்றுக் கொண்டவர்களாக பல அதிதீவிர கம்யூனிஸ்ட் குழுக்களைச் சேர்ந்தவர்கள் காட்டிக் கொள்கின்றனர். அவர்களிடம் நாம் காணும் பல குணங்களைப் பார்த்து இவர்கள் இப்படி என்றால் இவர்களின் முன்னோடியான சேகுவேராவும் இவ்வாறுதான் இருந்திருப்பார் என்பது போன்ற பல எண்ணப் போக்குகளை உருவாக்கிக் கொள்கிறோம். எடுத்துக்காட்டாக அதையே வெளிப்படையாகக் கூறாத தன்மைகள் அதாவது ஒருவரை, ஒரு வேலையில் அதைப் பற்றி எதையும் கூறாது இறக்கி விட்டுவிடு. அவர் அதில் சிக்கிக் கொண்டபின் அதை வைத்தே அதிலிருந்து மீளமுடியாதவராக அவரை ஆக்கி அவரை தங்களின் அணியில் நிரந்தரமாகச் சேர்த்துக் கொள்ளும் ஒரு வழிமுறையை அதி கம்யூனிஸ்ட் குழுக்கள் என்று அறியப்படும் பல குழுக்களிடம் பல சமயங்களில் பார்க்க முடிகிறது.

ஆனால் உண்மையில் சே-யும், அவரது குழுவினரும் அப்படிப்பட்டவர்களா? என்று வரலாற்று ஆதாரங்களை வைத்து பார்த்தால் நாம் ஏமாந்து போவோம். அவரது கியூபா புரட்சி ஆரம்பித்த அந்த வேளைகளில் புரட்சிப் படையினரை ஒன்றாக நிறுத்தி அவர்களிடம் சே-யும் பிடலும் முழங்கியிருப்பர். அதாவது நம் பயணிக்கப் போகும் பாதை பல இடர்பாடுகளைக் கொண்டது. இதில் நம்மையும் உங்களில் பலரும் கூட உயிரிழக்க நேரலாம். எனவே உயிர்பயம் உள்ளவர்கள் யாரேனும் இங்கு இருந்தால் முதலில் வெளியே வந்துவிடுங்கள். அவர்களுக்கு அரைமணி நேரம் அவகாசம் தருகிறோம். இவ்விடத்தைவிட்டு ஓடிவிடுவதற்கு என்று தெளிவாகக் கூறிய பிறகே தங்களது புரட்சிப் பயணத்தை அவர்கள் மேற்கொண்டனர். அது மட்டுமின்றி தங்களைத் தங்களது படையில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்ட இரண்டு 18 வயது நிரம்பாத சிறுவர்களை சே படையில் சேர்த்துக் கொள்ள மறுத்துவிட்டதால் தங்களைச் சேர்த்துக் கொள்ளாவிடில் தாங்கள் அவ்விடத்தைவிட்டு நகரப்போவதில்லை என அவர்கள் சத்தியாகிரகம் செய்தபின்னரே அவர்களை சே சேர்த்துக் கொண்டார். இன்று விடுதலைப் படை என்று அழைக்கப்படும் பல படைகளில் சிறுவர்களைக் கட்டாயப்படுத்திச் சேர்ப்பதாக புகார்கள் வந்து கொண்டிருக்கும் நிலையில் சே கடைபிடித்த மனித நேயத்தை உயர்வாக நினைந்து நிற்கிறது?




இந்தியா போன்ற பல தேசிய இனங்களைக் கொண்ட பெரிய நாடுகளைப் போல் இல்லாது பல லத்தீன் அமெரிக்க நாடுகள் பரப்பளவில் சிறியவையாகவும் ஆரம்பம் முதற்கொண்டு ஏதாவதொரு ஏகாதிபத்தியத்தின் பிடியிலும் அல்லது அவற்றின் பொம்மை அரசுகளின் பிடியிலும் இருந்தவையே. அவற்றில் ஆட்சி மாற்றங்கள் பல சமயங்களில் ராணுவச் சதிகள் மூலமாகவே நடந்தன. எனவே அந்த ஆட்சியாளர்கள் மக்களின் நன்மதிப்பை சிறிது கூட பெற்றவர்களாக இருக்கவில்லை.

அவர்கள் தங்களின் ஆயுத வலிமையினால் மக்களை அச்சுறுத்தி ஆட்சி செய்தார்களே தவிர அவர்களை ஜனநாயகம் போன்ற பெயர்களில் ஏமாற்றி ஆட்சி புரியவில்லை. எனவே மக்களின் மனநிலை எப்போதுமே பெரும்பாலும் அவர்களின் ஆட்சியாளர்களுக்கு எதிராகவே இருந்தது. அந்த ஆட்சியாளர்களை எதிர்ப்பதற்கும் தேர்தல் முறை போன்ற வழிமுறைகள் அங்கு பல காலம் அமுலில் இல்லை. அந்தச் சூழ்நிலையில் மக்களின் வெறுப்பின் காரணமாக அவ்வரசுகளை ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிகள் மூலம் எதிர்கொள்ளத் தயாராக இருந்தவர்கள் அனைவருக்கும் மக்களின் ஒட்டுமொத்த ஆதரவு கிடைத்தது.

அவ்வாறுதான் 82 பேர் கொண்ட பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான ஒரு குழு மெக்சிகோவிலிருந்து ஒரு படகில் புறப்பட்டு கியூபாவை சென்றடையும் போது அதில் உயிருடன் இருந்த 12 பேரைக் கொண்டு ஒரு மிகப் பெரிய ஆயுதம் தாங்கிய புரட்சியை நடத்த முடிந்தது. அதன் விளைவாக பிடல் காஸ்ட்ரோவால் கியூபாவின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடிந்தது. அவர்கள் கியூபாவிற்குப் புறப்படு கையில் அவர்களுக்கு நம்பிக்கை யூட்டக் கூடியதாக இருந்தது. கியூபாவின் பின் தங்கிய பொருளாதார சமூக சூழ்நிலைகள்தான். அதாவது அங்கு 1.5%மானோர் 40% நிலங்களைத் தங்கள் வசமாக்கி வைத்திருந்தனர். 20% மானோருக்கு வேலையில்லை, 37%மானோர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








இருந்தனர். வர்த்தக ரீதியாக அமெரிக்காவிற்குச் செலுத்த வேண்டிய கடன் அந்நாட்டிற்கு மிகமிக அதிகம் இருந்தது.

சேகுவேராவின் பொலிவிய சோதனையும் இந்தப் பின்னணியிலேயே செய்யப்பட்டது. மக்களின் பின்தங்கிய, கல்வியறிவு அற்ற, மருத்துவ வசதிகள் போன்றவை அறவே இல்லாத நிலை ஆகியவற்றை அடிப்படையாக வைத்து மக்கள் எழுச்சியை உருவாக்க முடியும் என்று சே நம்பினார். லத்தீன் அமெரிக்க நாடுகளின் அக்காலகட்ட நிலை எவ்வாறு இருந்தது என்பதற்கு ஒரு பொருத்தமான உதாரணம், சே மருத்துவப் பட்டம் பெற்ற ஒரு டாக்டர் என்பதால் அவர் செல்லும் இடங்களில் எல்லாம் அவரது படை தங்கியிருந்த இடங்களில் சாதாரண மக்களுக்கு வைத்தியம் செய்தார். அவ்வாறு அவரிடம் வைத்தியம் செய்ய வந்த ஒரு பெண் அவரிடம் எனக்கு வியாதி ஒன்றும் இல்லை ஆனால் நான் இதுவரை டாக்டர் ஒருவரையும் பார்த்ததில்லை. டாக்டர் எப்படி இருப்பார் என பார்ப்பதற்கே வந்தேன் என்று கூறினாராம்.

இவ்வாறு மக்கள் இருந்த பின்தங்கிய நிலையை மட்டுமல்ல பொலிவிய நாட்டின் வடக்குப் பகுதியில் செப்புச் சுரங்கங்களில் நடந்து கொண்டிருந்த வேலை நிறுத்தத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் சே தனது புரட்சிப் பயணத்தைத் தொடங்கினார். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட சுரங்கத் தொழிலாளர்கள் தங்கள் ஒவ்வொருவரின் ஊதியத்திலிருந்தும் 50 பொலிவியானோ என்று கூறப்படும் அந்நாட்டு ரூபாய்களை புரட்சியாளர்களுக்கு நிதியாக வழங்க முன்வந்தனர். இவ்வாறு சேகுவேராவின் பொலிவிய நாடு, அதன் சமூகம் அதில் இருக்கக் கூடிய முரண்பாடுகள் ஆகியவை குறித்த அவரது கணிப்பு மேலோட்டமாகவும் பொதுவிலும் சரியாகவே இருந்தது.

லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கே உரிய அமெரிக்க ஏகாதிபத்திய பொம்மை ஆட்சியாளர்களை ஆயுதந்தாங்கி எதிர்கொண்டால் மக்கள் ஆதரவு தானே வரும் என்று அவர் நம்பினார். அந்த நம்பிக்கைக்கு உகந்த விதத்தில் பொலிவிய மக்களின் மனநிலை இல்லை. கியூபாவின் மக்களைப் போல் அல்லாது அவர்களிடம் அரசு குறித்த அச்ச உணர்வு மேலோங்கி இருந்தது. புரட்சியாளர்கள் மீதான நம்பிக்கை குறைவாக இருந்தது. அந்த ஒரு அம்சத்தைத் தவிர வேறு அனைத்து சூழ்நிலைகளையும் கணிப்பதில் சே சரியாகவே இருந்தார். ஆனால் பல நாடுகளில் அவரது வழியில் செல்வதாகக் காட்டிக் கொள்ளக் கூடியவர்கள் அனைத்துக் கணிப்புகளிலுமே தவறு செய்தவர்களாகவே உள்ளனர்.

"தற்போது நிலவும் மனிதாபிமான கண்ணோட்டத்தில் இருந்து தனிச் சொத்துடைமை என்ற களங்கத்தை நீக்கிவிட்டால் அதன் பின் வரும் உன்னதமான மனிதாபிமானமே கம்யூனிசம்" என்று மார்க்ஸ் கூறினார். சே எத்தனை உயர்ந்த மனிதாபிமானியாக இருந்தார் என்றால் அவர் தங்களின் ராணுவத்திற்கான உணவுப் பொருட்களை மக்களிடமிருந்து பெறும்போது கூட அவற்றிற்கான விலை என்ன என்பதை அவர்களிடம் கேட்டு எந்த வற்புறுத்தலுமின்றி விலையைக் கொடுத்து அவர்களிடமிருந்து வாங்கினார். புரட்சியாளர்கள் குறித்து எழுதுவதற்காக அங்கு வந்து சிக்கிக் கொண்ட டிப்ரே போன்ற எழுத்தாளர்களை அந்நிலையில் அவர்கள் இருந்த சிக்கலான பொலிவியப் பகுதியிலிருந்து பத்திரமாக அனுப்புவது மிக மிக சிரமமானது என்றிருந்த நிலையிலும் அவர்களை அனுப்ப பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டார். சே பிரான்ஸ் நாட்டிற்குச் சென்று ஜான்பால் சாத்தர் போன்ற எழுத்தாளர்களிடமும் பிரிட்டன் சென்று பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் போன்ற பகுத்தறிவுவாதிகளிடமும் புரட்சியாளர்களுக்கு ஆதரவான அறிக்கைகள் விடவும் பணம் திரட்டி தரவும் கேட்டுக் கொள்ளுமாறு அவர்களிடம் வேண்டிக்கொண்டார்.

தங்கள் ராணுவத்தில் உள்ளோர் சாதாரண அப்பாவி மக்களைத் துன்புறுத்தும், பெண்களை மானபங்கம் செய்தல் செயல்களில் ஈடுபட்டால் அவர்களுக்கு கடுமையான தண்டனைகளையே வழங்கினார். அதாவது அவர்களை ஈவிரக்கமின்றி சுட்டுத் தள்ளினார். அத்தகைய உயர்ந்த கலாசாரத்தையும் ஒழுக்க நெறிமுறையையும் அவர் கொண்டிருந்ததற்குக் காரணம் அவர் ஒரு உயர்ந்த சித்தாந்தத்தை தனதாகக் கொண்டிருந்ததும் அதன் அடிப்படையில் அவர் வாழ்ந்த சமூகத்தை கணிக்க முடிந்ததுமே ஆகும்.

அந்த உயர்ந்த ஒழுக்க நெறிமுறை மக்களுக்காக உயிரைக் கொடுக்கும் மகத்தான தியாக உணர்வினை அவரிடம் உருவாக்கியிருந்தது. அவர் ஒரு குட்டி முதலாளித்துவ குணங்களை அதிகம் கொண்ட மத்தியதர வர்க்கத்திலிருந்து வந்தவராக இருந்த போதிலும் அவரால் தன்னை உழைக்கும் வர்க்கக் கலாசாரத்தை மனமுவந்து கைக்கொள்பவராக ஆக்கிக்கொள்ள முடிந்தது. குட்டி முதலாளித்துவ அவசரத் தன்மையும், பல இடங்களில் தங்களது தனிப்பட்ட சிந்தனைக்குகந்த விதத்தில் புறச்சூழலைத் திரித்துப் பார்க்கும் போக்கும் அவரிடம் இல்லை. எனவே அவர் உண்மையான புரட்சியாளனாக இருந்தார். அதாவது மனித குலத்தின் மீதான நேசமே அவரைப் புரட்சிப் பாதைக்கு இட்டுச் சென்றது. யார் மீதான எந்தவகை வெறுப்பும் அவரை அப்பாதைக்கு இட்டுச் செல்லவில்லை. அவரைப் பொறுத்தவரை பொலிவிய ஆட்சியாளர்களும் அத்தனை கொடூரமானவர்களாக இருந்தனர். விசாரணை போன்ற நாடகங்களை நடத்துவதற்கு முன்னரே சே-யை கொல்வது என்று முடிவிற்கு அவர்கள் வந்துவிட்டனர். அப்போது அவருக்கு வயது 39. அவர்களில் மிக முக்கிய இராணுவ தளபதி ஒருவன் கூறினான்: கியூபாவில் பாடிஸ்டா செய்த மாபெரும் தவறு அவர் பிடியில் சிக்கிய பிடலை கொல்லாமல் விட்டதுதான் என்று.

சே பெரும்பாலான சமயங்களில் மலரினும் மென்மையான மனிதாபிமான மனநிலை கொண்டவராக இருந்தார். அவரைக் காட்டிக் கொடுத்தவர்களைக்கூட அவர் வெறுக்கவில்லை. அவரது சிறைக்காவலர்கள் மனதிலும் ஒரு செல்வாக்கைச் செலுத்தினார். அவர் தனது கைவிலங்குகளைக் கழட்டிவிட முடியுமா என்று கேட்ட போது முடியாது என்று அவர் முகத்தைப் பார்த்து அந்த சிறைக் காவலரால் சொல்ல முடியவில்லை. அதே சமயத்தில் மக்கள் விரோதிகளை அவர்கள் தங்கள் அணியில் இருந்தவர்களாகவே இருந்த போதும் அவர்களை மன்னிக்காத மன உறுதி கொண்டவராக இருந்தார். அந்த மலரை ஒத்த இதயத்தின் மறுபக்கத்தில் உருக்கின் உறுதியும் இருந்தது. அதனால்தான் உலக அளவில் உழைக்கும் வர்க்கப் புரட்சியாளர்களின் இதயத்தில் உணர்வாக, உத்வேகமாக, உந்து சக்தியாக, ஒரு அறவுணர்வாக அவர் வாழ்கிறார்.

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

எல். ரி. ரி. ஈ.யை ஆதரிக்கும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவை எல். ரி. ரி. ஈ. போராளிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக நடத்தப்பட்டவை. எனினும் வெளிப்படையாக இவை சுதந்திர சமூக நல்வாழ்வுக் குழுக்களினால் நடத்தப்படும் ஆதரவற்றோர் இல்லங்கள் என்று காண்பிக்கப்பட்டதாக லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

இந்த தமிழ்ச்சோலைப் பாடசாலைகளில் மாணவர்களிடம் இருந்து ஒரு பாடத்திற்கு 8 முதல் 25 யூரோவை கட்டணமாக அறவிடுகின்றார்கள். சிங்களவர்களுக்கு எதிராக பகைமை உணர்வையும் பழிவாங்கும் உணர்வையும் கட்டியெழுப்புவதற்கு இந்தப் பாடசாலைகள் பெரும்பங்கை வகிக்கின்றன என்றும் அறிவிக்கப்படுகிறது.(ரித்மா திஸாநாயக்க)

இலங்கையர்களின் ......ம் பக்கத் தொடர்ச்சி

அதேவேளை இன்னமும் 26 பேரினது சடலங்களை இலங்கைக்கு எடுத்து வருவதற்காக வெளிவிவகார அமைச்சு குறித்த நாடுகளின் தூதரகங்களுடன் தொடர்புகொண்டு வருவதாகவும் மரண விசாரணைகள் முடிவடையும் வரையில் காத்திருக்க வேண்டி ஏற்பட்டிருப்பதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

இவ்வருடம் முதல் 52 நாட்களுக்குள் சவூதியில் 34 பேரும், குவைத்தில் 11 பேரும், ஓமானில் 11 பேரும், டோஹா கட்டாரில் ஆறு பேரும், துபாயில் ஐவரும், லெபனானில் நால்வரும், ஜோர்டானில் இருவரும், மஸ்கட்டில் நால்வரும், பேங்கொக்கில் இருவரும் உயிரிழந்துள்ளனர். இதனைத்தவிர அபுதாபி, கோலாலம்பூர், லண்டன், ஹொங்கொங், அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிலும் தலா ஒருவர் வீதம் அறுவர் உயிரிழந்திருப்பதாகவும் அவ்வதிகாரி குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசுக்கு ஆதரவாக நாடு தழுவிய ஆர்ப்பாட்டங்கள்





ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதிலும் பாரிய ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், அரசாங்கத்துக்கு ஆதரவாக சுயதொழில் புரிவோருக்கான சம்மேளனம் ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டமொன்று கொழும்பு, பம்பலப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்றது. கிழக்கு மாகாணத்தில், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டம் ஒன்று மட்டக்களப்பு நகரில் இடம்பெற்றது. இதனை மங்களாராமய விகாராதிபதி சுமண ரத்ன தேரர் ஏற்பாடு செய்திருந்தார். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் மட்டக்களப்பு மணிக்கூட்டுக்கோபுரம் அருகில் பான் கி மூனின் கொடும்பாவி எரிக்கப்பட்டு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இலங்கை அரசிற்கு எதிராக மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணைக்கு எதிராக வெலிமடையிலும் இன்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதில் பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்டதுடன் அரசாங்கத்திற்கும், ஜனாதிபதிக்கும் தமது ஆதரவினை தெரிவித்தனர். வெலிமடை கச்சேரிக்கு முன்பாக இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைக்கு எதிராகத் திட்டமிடப்பட்டிருக்கும் நடவடிக்கைகளுக்கும் ஐநா.செயலாளர் நாயகம் பான்கிமூன் அவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அமெரிக்க அரசாங்கத்தையும் அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபமா அவர்களைக் கண்டித்தும் இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்தும் இன்று காத்தான்குடியில் கடைகள், பாடசாலைகள், அரச, தனியார் வங்கிகள், பொது ஸ்தாபனங்கள், சந்தைகள் மூடப்பட்டுள்ளதுடன் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. 1990 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளால் மனிதப்படுகொலை மேற்கொள்ளப்பட்ட காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா ஜும் ஆ பள்ளிவாசலில் து ஆப்பிரார்த்தனை என்பன இன்று காலை இடம் பெற்றது. இதில் உலமாக்கள், முக்கியஸ்தர்கள், அரசியல் பிரமுகர்கள், சம்மேளன பிரமுகர்கள் கலந்து கொண்டனர். காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா ஜும் ஆ பள்ளிவாசலில் இருந்து தொடங்கிய ஆர்ப்பாட்டக்காரர்கள் பேரணி பட்டக்கொடிகளுடனும் காத்தான்குடி பிரதான வீதி வழியாக ஐநாவுக்கும் அமெரிக்காவுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து கோஷம் எழுப்பிய வண்ணம் காத்தான்குடி பிரதேச செயலகம் வரை சென்று அங்கு பிரதேச செயலாளர் முன்னிலையில் ஐ.நா செயலாளர் நாயகம் பான்கிமூனுக்கு அனுப்புவதற்காக மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

# 5 ஆஸ்கர் விருதுகளைக் குவித்த "தி ஆர்டிஸ்ட்" பாகிஸ்தான், ஈரான் படங்களுக்கும் விருது







அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற 84வது ஆஸ்கர் விருதுகள் வழங்கும் விழாவில், மௌனப் படமான "தி ஆர்டிஸ்ட்" மற்றும் "ஹியூகோ" ஆகிய படங்கள், ஐந்து விருதுகளைப் பெற்றுள்ளன.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில், உலகத் திரைப்படங்களுக்கான, 84வது ஆஸ்கர் விருதுகள் வழங்கும் விழா, கோலாகலமாகத் துவங்கியது.

கடும் போட்டி.

இம்முறை, ஆஸ்கர் விருதுக்கான போட்டியில், மௌனப் படமான தி ஆர்டிஸ்ட், அயர்ன் லேடி, ஹியூகோ, தி டிசன்டன்ட்ஸ், மிட் நைட் இன் பாரிஸ் ஆகிய படங்கள் முன்னணியில் இருந்தன. சிறந்த படம், சிறந்த நடிகர், சிறந்த இயக்குநர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த ஆடை வடிவமைப்பு ஆகியவற்றிற்காக, ஐந்து ஆஸ்கர் விருதுகளை, "தி ஆர்டிஸ்ட்" படம் வென்றது.









அதே போல், கலை இயக்கம், சவுண்டு மிக்சிங், எடிட்டிங், விஷுவல் எபெக்ட்ஸ் உள்ளிட்டவற்றிற்காக, "ஹியூகோ" படம், ஐந்து ஆஸ்கர் விருதுகளை வென்றது. மூன்றாவது விருது முன்னாள் பிரிட்டன் பிரதமரான மார்கரெட் தாட்சரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும், "அயர்ன் லேடி" படத்தில், தாட்சர் வேடத்தில் நடித்த மெரில் ஸ்ட்ரீப்புக்கு, சிறந்த நடிகைக்கான ஆஸ்கர் கிடைத்தது. இது, இவர் பெறும் மூன்றாவது ஆஸ்கர் விருது என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரான், பாகிஸ்தான் படங்கள்.

சிறந்த வெளிநாட்டு மொழிப் படத்திற்கான விருதை, ஈரானின் "ஏ செபரேஷன்" படம் வென்றது. மிகச் சிறந்த ஆவணப் படத்திற்கான விருதை, பாகிஸ்தானின் "சேவிங் பேஸ்" குறும்படம் பெற்றது.

பாகிஸ்தானில், பெண்கள் மீது நடத்தப்படும் ஆசிட் வீச்சு குறித்து எடுக்கப்பட்ட படம் தான் "சேவிங் பேஸ்". பிரான்சில் தயாரிக்கப்பட்ட "தி ஆர்டிஸ்ட்" படம், 1927 முதல் 1932 வரையிலான காலகட்டத்தில், ஹாலிவுட்டில் நடக்கும் திரையுலக மாற்றங்களால் பாதிக்கப்படும் மௌனப் பட கதாநாயகனை மையமாகக் கொண்டது. பொதுவாக, ஹாலிவுட் படங்கள் தான், சிறந்த படம் உள்ளிட்டவற்றுக்கான ஆஸ்கர் விருதுகளை அள்ளிச் செல்லும். இதற்கு மாறாக, இம்முறை பிரெஞ்சு படம் ஐந்து ஆஸ்கர் விருதுகளை குவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ரஹ்மான் கச்சேரி.

இவ்விழாவில், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் கலந்து கொண்டு, இசைக் கச்சேரி நிகழ்த்தினார். "127 ஹவர்ஸ்" படத்தில், தான் இசையமைத்த பாடல்களை அங்கு பாடினார். ரிலையன்ஸ் தொழிலதிபர் அனில் அம்பானியும் கலந்து கொண்டார். "தி ஹெல்ப், வார் ஹார்ஸ், ரியல் ஸ்டீல்" ஆகிய படங்களைத் தயாரித்த, ஸ்டீவன் ஸ்பில்பெர்க்கின் "ட்ரீம் வொர்க்ஸ் ஸ்டுடியோஸ்" நிறுவனத்தில், 51 சதவீதம், அனில் அம்பானியின் ரிலையன்ஸ் என்டர்டெயின்மென்ட் நிறுவனம் பங்குகளை வைத்துள்ளது.

ஈரானில் கொண்டாட்டம்:

ஈரானின் பாரசீக மொழியில் எடுக்கப்பட்ட "ஏ செபரேஷன்" படம், ஈரானிய நடுத்தர குடும்பத்தில் ஏற்படும் பிரச்னைகளை மையமாகக் கொண்டது. நாட்டை விட்டு வெளியேறி, வெளிநாட்டில் குடியேற வேண்டும் என விரும்பும் மனைவி, அல்ஜீமர் என்ற மறதி நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் தனது தந்தையை விட்டு விட்டு வரத் தயங்கும் கணவன் இடையிலான பிரச்னைகளை, இப்படம் உணர்ச்சிப்பூர்வமாக விவரிக்கிறது. சிறந்த வெளிநாட்டு மொழிப் படத்திற்கான ஆஸ்கர் விருதை, இப்படம் பெற்றிருக்கிறது என்ற தகவல் வெளியானதும், ஈரானில் மக்கள் மத்தியில், மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தது. இஸ்ரேல் படமான, "பூட்நோட்" என்ற படமும், ஆஸ்கருக்கு வந்திருந்ததால், இந்த வெற்றி இஸ்ரேலுக்கு எதிரான வெற்றியாக அங்கு சித்திரிக்கப்படுகிறது.

அதோடு, ஈரானிய பண்பாட்டுக்கு, அமெரிக்காவில் கிடைத்த வெற்றி எனவும், ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. ஈரானில், செயற்கைக்கோள் வழியான வெளிநாட்டு சேனல்கள் தடை செய்யப்பட்டிருப்பதால், தேசிய தொலைக்காட்சி, செபரேஷன் படத்திற்கான விருது வழங்கும் காட்சிகளை மீண்டும் மீண்டும் ஒளிபரப்பிக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல் ஏலம்: மஹேலவை வாங்கியது டெல்லி, பெங்களூர் அணியில் முரளி



இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பில்.எல்.) கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான வீரர்களின் ஏலத்தில் இலங்கை அணித் தலைவர் மஹேல ஜயவர்தன 14 லட்சம் அமெரிக்க டொலர்களுக்கு டெல்லி டேர்டெவில்ஸ் அணியினால் வாங்கப்பட்டுள்ளார். இலங்கையின் அணியின் முன்னாள் சுழற்பந்து நட்சத்திரமான முத்தையா முரளிதரன் 220,000 டொலர்களுக்கு பெங்களூர் ரோயல் சலெஞ்சர்ஸ் அணியினால் வாங்கப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல். 5 ஆவது தொடருக்கான ஏலம் பெங்களூரில் இன்று சனிக்கிழமை நடைபெற்று வருகிறது.


கடந்த வருடம் ஐ.பி.எல். தொடரில் அறிமுகமான கொச்சி டஸ்கர்ஸ் அணி கலைக்கப்பட்டுவிட்டதால் அவ்வணியைச் சேர்ந்த மஹேல ஜயவர்தன, முத்தையா முரளிதரன், ரவீந்திர ஜடேஜா பிரெண்டன் மெக்கலம் முதலான வீரர்களும் ஏலம் விடப்பட்டனர். இதனால் இம்முறை இந்த ஏலம் அதிக கவனத்தை ஈர்த்தது. மொத்தமாக11 நாடுகளைச் சேர்ந்த 144 வீரர்கள் ஏலம் விடப்பட்டனர்.

ரவீந்திர ஜடேஜாவை வாங்குவதற்கு சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் டெக்கான் சார்ஜஸ் அணிகளிடையே கடும் போட்டி நிலவியது. இரு அணிகளும் 20 லட்சம் டொலர்களை வழங்க முன்வந்தன. இதில் அறிவிக்கப்படாத தொகையொன்றை வழங்கி சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஜடேஜாவை பெற்றது.

மஹேல ஜயவர்தனவுக்கு அடிப்படை தொகையாக 3 லட்சம் டொலர் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி 1.4 மில்லியன் டொலர்களுக்கு வாங்கியது.

முத்தையா முரளிதரனை ரோயல் சலெஞ்சர்ஸ் அணி 220,000 டொலர்களுக்கு வாங்கியது. பிரெண்டன் மெக்கலம் 900,000 டொலர்களுக்கு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியினால் வாங்கப்பட்டார். இந்திய வீரர் வினய் குமாரை 10 லட்சம் டொலர்களுக்கு ரோயல் சலெஞ்சர்ஸ் வாங்கியது. வீரர்களின் ஏலம் தொடர்கிறது.

# ஈரான் பெட்மின்டன் தொடரில் நிலுக கருணாரட்ண சம்பியன்



ஈரானில் நடைபெற்ற ஜபார் வெற்றிக்கிண்ண சர்வதேச பெட்மின்டன் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த நிலுக கருணாரெட்ன சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மூன்று மாதங்களுக்குள் நிலுக கருணாரெட்ன ஐந்து போட்டிகளில் இவ்வாறு சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், உலகின் பிரபலம் பெற்ற 65 பெட்மின்டன் வீராங்கனைகளுடன் போட்டியில் ஈடுபட்டுள்ளார். நிலுக கருணாரட்ன இலங்கை பெட்மின்டன் சம்மேளனத்தினால் ஒருவருட விளையாட்டுத் தடை விதிக்கப்பட்டிருந்த போதிலும் விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயின் பணிப்புரையின் பேரில் அத்தடை நீக்கம் செய்யப்பட்டிருந்தது.

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பை பெற்றிருந்த நிலுக கருணாரெட்ண, இறுதிப் போட்டியில் உலக கனிஷ்ட பெட்மின்டன் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற இந்தியாவைச் சேர்ந்த சமீர் விமார்யவை 21-18, 21-15 என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்தார்

# ஈ. எஸ். பி. என். விருது: டெண்டுல்கர் தேர்வு



நட்சத்திர துடுப்பாட்டவீரர் சச்சின், டெஸ்ட் துடுப்பாட்ட வீரருக்கான ஈ. எஸ். பி. என். கிரிக் இன்ஃபோ விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் கேப்டவுன் போட்டியில் சிறப்பாக ஆடி 146 ஓட்டங்கள் குவித்ததன் மூலம் அவர் இந்த விருதை தட்டிச் சென்றுள்ளார்.

தேர்வுக் குழு பரிந்துரைத்த 3 பேர் பட்டியலில் சச்சின், திராவிட், அவுஸ்திரேலிய தலைவர் மைக்கேல் கிளார்க் ஆகியோர் இடம்பெற்றிருந்தாலும், இறுதியில் சச்சினுக்கே விருது கிடைத்துள்ளது. சச்சின், இரண்டாவது முறையாக ஈ. எஸ். பி. என். கிரிக் இன்ஃபோ விருதைப் பெறுகிறார். இதற்கு முன்னதாக 2009ல் ஒருநாள் போட்டிக்காக இந்த விருதை வென்றுள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஹைதராபாத்தில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் 175 ஓட்டங்கள் குவித்ததன் மூலம் விருது கிடைத்தது.

டெஸ்ட் போட்டியின் சிறந்த பந்து வீச்சாளருக்கான ஈ. எஸ். பி. என். கிரிக் இன்ஃபோ விருது நியூஸிலாந்து பந்து வீச்சாளர் டக் பிரேஸ்வெல்லுக்கு கிடைத்துள்ளது. சர்வதேச கிரிக்கெட்டில் அடியெடுத்து வைத்த முதல் ஆண்டிலேயே அவர் இந்த விருதைப் பெற்றுள்ளார். ஹோபர்ட்டில் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 40 ஓவர்களை விட்டுக் கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் இந்த விருது அவருக்கு கிடைத்துள்ளது.

கடந்த உலகக் கோப்பையில் இங்கிலாந்துக்கு எதிராக 63 பந்துகளில் 123 ஓட்டங்கள் குவித்து அயர்லாந்தின் வெற்றிக்கு உதவிய கெவின் ஓ பிரையனுக்கு ஒருநாள் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரர் ஈ. எஸ். பி. என். கிரிக் இன்ஃபோ விருது கிடைத்துள்ளது.

ஒரு நாள் போட்டியின் சிறந்த பந்து வீச்சாளருக்கான ஈ. எஸ். பி. என். கிரிக் இன்ஃபோ விருது அவுஸ்திரேலியாவின் மிட்செல் ஜான்சனுக்கு கிடைத்துள்ளது. பல்லேகலவில் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கைக்கு எதிராக 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார் ஜான்சன்.



# இலங்கை பிரீமியர் லீக் போட்டி?

கடந்த வருடம் ஜுலை மாதம் இலங்கையில் இடம் பெறவிருந்த இலங்கை பிரீமியர் லீக் 20இற்கு20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியினை இவ்வருடம் மீண்டும் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது சர்வதேச ரீதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் நிறைவு பெற்றதும் ஆரம்பமாகவுள்ள மேற்படி பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் றுஹுணு, மேல் மாகாணம், ஊவா, வயம்ப, மலைநாடு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அணிகள் மோதவுள்ளன. இச் சுற்றுப் போட்டி 2 குழுக்களாக பிரிக்கப்பட்டு 18 தினங்களில் 24 போட்டிகள் இடம் பெறவுள்ளன. இரண்டு குழுக்களிலுமிருந்து 4 அணிகள் அரை இறுதிப் போட்டிகள், இறுதிப் போட்டிக்கு 2 அணிகளும் தெரிவு செய்யப்படவுள்ளன.

றுஹுணு அணிக்கு சனத் ஜயசூரியவும், மேல் மாகாண அணிக்கு ரீ. எம். டில்சானும், ஊவா அணிக்கு சமிந்த வாஸ்வும், வயம்ப அணிக்கு மஹேல ஜயவர்தனவும், மலையக அணிக்கு குமார் சங்கக்காரவும், கிழக்கு மாகாண அணிக்கு பாகிஸ்தான் வீரர் ஸஹீட் அப்ரிடியும் வட மாகாண அணிக்கு டென்னிஸ் விட்டோரியும் தலைமை தாங்கவுள்ளனர். ஒவ்வொரு அணியிலும் 5 சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் கட்டாயம் அங்கம் வகிப்பார்கள் என்று ஏற்பாட்டு குழுவினர் அறிவித்துள்ளனர்.

"தெளிவு" மாத இதழ் இளைய சமுதாயத்தினரின் குறிப்பாக மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தவும் அவர்களது எழுத்தாற்றலுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் உயர் நோக்கிலும் ஆரம்பிக்கப்பட்டதாகும். பொதுவாக அனைத்து வயதினரும் வாசித்துப் பயன்பெறக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த கலை, இலக்கிய மாத இதழின் வளர்ச்சிக்கு உங்கள் ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் நாம் நாடி நிற்கின்றோம்.

பின்வரும் இடங்களிலும் எமது பத்திரிகைகளைப் பெற்றுக் கொள்ளலாம். வேறு முகவர்கள் இதனை விற்பனை செய்ய விரும்பினால் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். கவர்ச்சியான கழிவு தரப்படும்.

Zeenath Dharbar Book Depot, Symond's Road, Maradana.
New Street, Weligama.
Rizwies, 114, Galle Rd., Wellawatte.
Poobalasingam Book Shop Colombo 6
New City Stores Akurana.
Hira Book Shop & Communication, Akurana.
Humairas, No.3, Hill Street, Kandy.
Abdullah & Co. Super Market, Nawalapitiya.
Nawshad Traders, Main Street, Akkaraipatru.
People's Shopping Centre, Main Street, Addalaichenai.
Haniffa Hotel & Tea Room Main Street, Kalmunai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org